# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, பங்குனி 19உ (1—4—73) ஞாயிறு ஸபர் 26 — புத்தகம் 26 இதழ் 16


## தெல்லிப்பளையில் கடையடைப்பு!

### உதவியமைச்சர் விஜயத்தை எதிர்த்து!!

கடந்தவாரம் வடபகுதிக்கு விஜயம் செய்திருந்த உதவியமைச்சர் திரு. பி. எச். பண்டார, தெல்லிப்பளைக்கு சென்றிருந்த போது அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாக தெல்லிப்பளையில் உள்ள கடைகள் யாவும் பூட்டப் பட்டிருந்தன.

தெல்லிப்பளையில், ப.நோ கூ. சங்ககிராமியவங்கியைத் திறந்து வைப்பதற்கு திரு. பண்டார சென்றிருந்த போதே கடைகளைப்பூட்டி அவருக்கு மக்கள் தாமாகவே எதிர்ப்பு தெரிவித்தனர். தெல்லிப்பளை தந்தை செல்வாவின் பிறந்த ஊர் என்பது தெரிந்ததே.

# போதனமொழியை மாற்ற அதிகாரமில்லை

# கல்வியமைச்சுக்கு திருச்செல்வம் சவால்!

'பெற்றோர் விரும்பும் மொழியே ஒரு பிள்ளையின் போதனமொழியாகஇருக்க வேண்டும் என்ற முடிவை இந்நாட்டிலுள்ள எந்த ஒரு தமிழ்க்கட்சியும் எந்தக் காலத்திலும் ஏற்றது கிடையாது. அப்படி ஏற்றுள்ளதாக கூறமுடியுமா என்று கல்வியமைச்சுக்கு நான் சவால் விடுகிறேன்.'

—இவ்வாறு முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. மு. திருச்செல்வம் கியூ.சி. சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்க காலத்தில் தமிழரசுக்கட்சியின் சார்பில் அங்கம் வகித்தவரான திரு. மு. திருச்செல்வம், போதனமொழி பற்றி அன்றைய அரசு காலத்தில் ஏற்கப்பட்டிருந்த கொள்கையை இந்த அறிக்கையில் தெளிவாக விளக்கியுள்ளார். அந்த அறிக்கையின் முழு விபரம்வருமாறு:—

'நாங்கள் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்த காலத்தில் போதன மொழி பற்றிய சட்டங்கள் பின்வருமாறு இருந்தன.

**ஆரம்பப் பாடசாலைகள்:-**


எந்த ஒரு ஆரம்பப்பாடசாலையிலும் 15க்கு குறையாத சிங்கள மாணவர்கள் படித்தால், அவர்களுக்கு சிங்களத்தில் போதிக்கப்பட வேண்டும். அதே போல எந்த ஒரு ஆரம்பபாடசாலையிலாவது 15க்கு குறையாத தமிழ்ப்பிள்ளைகள் படித்தால் அப்பிள்ளைகளின் போதனமொழி தமிழாகவேயிருக்க வேண்டும்.

பிள்ளைகளின் பெற்றோர் விரும்பினால், ஒரு தமிழ் குழந்தைக்கு சிங்களத்தில் போதிக்கவும் சிங்களக் குழந்தைக்கு தமிழில் போதிக்கவும் சட்டத்தில் இடமளிக்கப்பட்டிருந்தது.

சிரேட்ட பாடசாலைகளைப் பொறுத்தவரை — சிங்களப் பாடசாலைகளாகப் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் போதன மொழி சிங்களமாகவும், தமிழ்ப் பாடசாலைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் போதனமொழி தமிழாகவும் இருக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

ஆங்கிலத்தைப் போதனமொழியாகக்கொண்ட பாடசாலைகளில் முஸ்லிம்களைத்தவிர ஏனைய பிள்ளைகளுக்கு தாய் மொழி மூலம் பாட போதனை செய்ய

(7-ம் பக்கம் பார்க்க)



அகத்தினில் தமிழர் அல்லல் அலை அலையாக மோத
முகத்தினில் அவற்றைப் போக்கும் சிந்தனை முகிழ்ந்து நிற்க,
பகைத்தவர் தமையும் நேர்மைப் பண்பினால் வணங்க வைக்கும்
தகைக் குணத்தவர் எம் செல்வம், நாயகம் தழைத்து வாழ்க!

## அச்சுவேலியில் கறுப்புக்கொடி காத்திருந்தது

### அமைச்சர் வரவில்லை!

அண்மையில் (24.3.73) வட பகுதிக்கு சென்றிருந்த சமூக சேவை அமைச்சர் ரி. பி. தென்னக்கோனுக்கு அச்சுவேலியில் கறுப்புகொடி காட்டதமிழர்கூட்டணிஇளைஞர்கள்தயாராகஇருந்தனர் ஆனால்அமைச்சர் அந்தப் பக்கம்எட்டிப் பார்க்காதுவெற்றிகரமாகப் பின்வாங்கிவிட்டார் என்று தெரிகிறது.

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசாமி கோவிலில் வைத்து அமைச்சருக்கு வரவேற்பு அளிப்பதற்கு சுயநலமிகள் சிலர் திட்டமிட்டு துண்டுப்பிரசுரமும் வெளி

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75 அகவை காணும் நாயகப் பெரியாருக்கு ஒரு தம்பியின் வேண்டுகோள்!

ஈழத் தமிழர்களின்
அருமைத் தந்தையே!
என வணக்கத்துக்கும்
இனிய அன்புக்கும் உரியவரே!
எட்டவே இருந்தாலும்,—
கிட்டிய பாசப் பிணைப்பால்,
ஈழத் தமிழர்களின் இன்னல்
கண்டு
கசிந்து உருகும் என்
போன்றவர்களுக்கு
ஆறுதல்காட்சி வழங்கும்
நாயகப் பெரியாரே!

எழுபத்தைந்தாம் அகவையில் நல்லடி வைக்கின்ற தங்களின் தளரா முதுமைத் திருமுன் அன்பு மலர்கள் படைக்கின்றேன்; 'ஈழத் தமிழர்க்கு உரிமைப் பெருவாழ்வு என்னும் ஆசியைத் தாருங்கள்' என்று விரும்பி வேண்டுகின்றேன்.

தமிழர்நலத் திசையில் நடக்கும் போராட்டப்பணியில் வெள்ளிவிழாக் கண்டு, மேற்செல்லும் உங்கள் வீர நடை கண்டு பூரிப்பு அடைகின்றேன்; வழவழாத் தமிழர்களை ஒதுக்கித் தள்ளி,— மாவீரத் தமிழர்களை அணி சேர்த்த உங்கள் வரலாற்றிலே 'தமிழர் கூட்டணி' என்னும் புதிய அத்தியாயம் தொடங்கி இருப்பது கண்டு மகிழ்ச்சியில் திளைக்கின்றேன்.

தங்கள் உரிமையைப்பெறுவதற்குக்கூட மற்றவர்களுக்கு (தங்கள் எதிரிகளுக்கு)த் தீங்கு செய்யாத அகிம்சை நெறியையே நடைமுறையாக்கிக்கொண்ட படையணியை நடத்தி, 'ஈழத்துக் காந்தி' என்னும் வீரச்சக்கர விருதுபெற்றீர்கள்; பெண்டு, பிள்ளை, வீடு, சுகம் என்னும் எல்லைகளைத் தாண்டமுடியாமல்,— அய்மபத்தைந்திலும் அறுபதிலும் சாய்வு நாற்காலிக்கே தங்களை ஒப்புவித்து விடும் பலர் நடுவே, எழுபத்தைந்தில் எடுத்து வைக்கின்ற அடியையும் தமிழர்பணித் தடத்திலேயே வைக்கிறீர்கள். உங்கள் அயரா மனம் கண்டு மகிழ்ந்து, உங்களுக்கு நிறைவான நலம் பொங்க விழைவு கொள்கின்றேன்.

**அன்புகூர்ந்து அனுமதியுங்கள்**

இளைஞனாகிய நான் நிமிர்ந்து நின்று, குனியாத உங்கள் முதுமையைக் கண்டு தெம்பு மிஞ்சுகின்ற இந்த வேளையிலே,- உங்கள் வாழ்வோடு பின்னிக் கிடக்கும் ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாற்றை மீண்டும் நினைவுகூர்கிறேன்; அந்த வரலாற்றில், தமிழ்க் காங்கிரசின் இளம் ரத்தங்கள் தமிழரசுக் கட்சியாகத் திரண்டு உருக்கொண்ட நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கின்றேன். தமிழ்க் காங்கிரஸ் என்னும் சிப்பியை உடைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சி என்னும் முத்து வெளிப்பட்டது. அந்த 'முத்து' உடைந்து வேறொரு முத்து உண்டாக முடியாது. ஆனால்,— இன்றைய நிலையில்,— அந்த முத்து தன் ஒளியிலே எழுச்சிஏறிய ஒரு தனி வீச்சைப் பெற வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன்.

எழுபத்து அய்ந்து வயதுக்கும் நாற்பத்து அய்ந்து வயதுக்கும் இடைப்பட்ட முப்பது ஆண்டு இடைவெளியின் விழைவுவேகம் என்று பாட்டுமே நான் இதைக் கருதவில்லை. ஈழத்து விடுதலை வரலாறும், அதிலே இணைந்து இழுபறிபட்டுத் தேய்ந்து பரிதாபக் கோலம் காட்டும் ஈழத்துச் சிறுபான்மை இனத்தினரின் உரிமையும் இன்று தமிழரசுக் கட்சியின் செயல்வீச்சிலே புதியதோர் எழுச்சியை எதிர்பார்க்கின்றன என்றே நான் கருதுகின்றேன்...

அரைநூற்றாண்டுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கையில் வைத்துக்கொண்டும், கட்சியின் கொள்கையாகிய அகிம்சை நெறி மற்றும் முதுமைக்கே உரிய அன்பு நெகிழ்ச்சி என்பவைகளின் அடிப்படையிலும் நீங்கள் மேற்கொள்ளும் நடைமுறைகளை நான் மதிக்கிறேன்: ''தம் இனிய மக்களுக்கு இன்னலும் இழப்பும் ஏற்பட்டுவிடக் கூடாதே'' என்ற ஆதங்கத்துடன், நீங்கள் தாய்மைப் பரிவோடு செயல்படுவது கண்டு என் இதயம் நெகிழ்கிறது;- கண்களின் விளிம்பிலே பனித்துளி ஒன்று எழுந்து உருள்கிறது...

ஆனாலும், நான் இளைஞன்; தங்கள் தந்தையரும் தாயாரும், பெரும்பான்மையினரின்கீழே தங்கள் உரிமையைப் பறிகொடுத்த வரலாற்றைக் கண்டு, இதயமும் கண்ணும் கலங்கிச் சிவந்துபோன காளையரிலே ஒருவன்; நாகரிகமான போராட்டங்களுக்கும் மக்களின் பொதுக்குரலுக்கும் செவியே திறக்காத அரசாங்கங்களின் இரும்புச் சப்பாத்துக்குக் கீழே அகப்பட்டுக் கண்பிதுங்கும் பல லட்சம் மக்களைக் கண்டு கண்டு பதைத்து நிற்கும் பல்லாயிரம் இளையவர்களிலே ஒருவன். என் இதயத்தை

## டாக்டர் சாலை இளந்திரையன்

உங்களிடம் திறந்து காட்ட, அன்புகூர்ந்து அனுமதியுங்கள்...

**எழுச்சி ஒன்று வேண்டும்**

நாம் பிறரை அடக்கி ஆளச் சூழ்ச்சிசெய்யவில்லை; மக்களுக்கிடையே கசப்புணர்ச்சியை விதைக்கப் படை திரட்டவில்லை; பறிக்கப்பட்ட நமது உரிமைகளை மீட்டுக்கொள்ளவே நாம் போராடுகிறோம். எனவே,— நாம் நீள நீளத் திட்டங்களையும் பாதுகாப்பான பந்தல்களையும் வகுத்துக்கொண்டு காலம் கழிப்பதைவிட,— மேற்சென்று மோதி, விரைவான முடிவு காண்பதையே நான் விரும்புகிறேன். பிறரின் உரிமையைப் பறித்துத் தன்னுடைய சுகத்தைப் பெருக்கிக்கொள்பவன், அதை இழந்துவிடாமலிருக்க, அமைதியாகத் திட்டமிட்டுக்கொண்டு காலம் கடத்தலாம்; அதனால் அவனுக்குப் பாதிப்பு எதுவும் இல்லை. உரிமையைப் பறிகொடுத்துவிட்டு நிற்கும் நாம், திட்டங்களை வகுத்து வகுத்துப் பரிசோதனைகள் செய்வதிலேயே நமது வாழ்வைக் கழிக்கமுடியாது; அப்படி நம் வாழ்வில் கடந்து செல்லுகிற ஒவ்வொரு நாளும், உரிமை இழந்தவராகவே நாம் கழித்துவிட்ட வீண் நாளே!

வயிறு நிறையத் தின்றிருப்பவன் தருமஞாயத் தத்துவ விசாரணைகளிலே ஈடுபட்டுக் கிடந்தால், அவன் உண்ட சோறு சீரணிக்கிறது; அவனுடைய உடலுக்கும் வளம் சேருகிறது. பட்டினிக்காரனாகிய நான் அந்தவிதமான விசாரணைகளில் போக்குகின்ற ஒவ்வொரு மணித்துளியும் என் பசிநோயை மிகுதியாக்கி என் வாழ்நாளையே அல்லவா கரைக்கிறது!



நோயாளிகளையே பார்த்துப் பார்த்து, அவர்களின் கண்ணீர்க் குரல்களையே கேட்டுக் கேட்டுப் பழகிப் போகிற டாக்டர்கள், வேதனை ஓலங்களுக்கு உணர்ச்சிமயமான எதிரொலி கொடுக்கமுடிவதில்லை; மேலும் சில நோயாளிகளைப் பார்க்க வாய்த்தால், ஒரு குறிப்பிட்ட நோயைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள வாய்க்குமே என்றுகூட அவர்கள் நினைப்பார்கள்! எழுச்சிப் போராட்ட வீரர்களை டாக்டர்களாகுமாறு விட்டுவிட்டால், மக்களின் துயரத் தொடர்ச்சி அவர்களின் நெஞ்சைத் தொடாது; தங்கள் கலைத்திறத்தைக் காட்டவே அவர்கள் துயர்க்கதையைப் பயன்படுத்தத் தொடங்கிவிடுவார்கள். ஆமாம்; அவர்கள், போராட்டங்களைப்பற்றி அலங்காரமாகப் பேசும் வெறும் மேடைக் கலைஞர்களாகிப் போவார்கள். பல இயக்கங்களில் ஏற்பட்டு, அந்த இயக்கங்களையே நொண்டியாக்கியுள்ள ஒரு போக்கு இது.

உரிமைகளுக்காக இயக்கம் நடத்துகிற நாம் டாக்டர்கள் அல்ல; நாம் படைவீரர்கள். போராட்டத்துக்கு அடிப்படையான காரணமும், அதை நடத்தி வெற்றிகொள்ள வேண்டும் [illegible] டும் நமக்குப் போதும்; உரிமைப் போராட்டங்களைப் பற்றிய இலக்கணங்களும் விவரணங்களும் நமக்குத் தேவை இல்லை. நமது மக்களின் உரிமையற்ற வரலாற்றையும் அதன் விளைவான தொல்லைகளையும் நீக்காமல் நம்மைத் தாண்டிச் செல்கிற ஒவ்வொரு நாளும், நமமைச் செயலிழப்புத் திசையில் நடத்தும் நாள் எனறே நான் நினைக்கிறேன்...

போராட்டத்துக்கு வலிமை சேர்ப்பதும் திறமாக நீந்தப் பழகுவதும் ஒன்றே என்று சொல்லுவார்கள். முழுமையாக நீந்தத் தெரிந்துகொண்டுதான் தண்ணீரில் இறங்குவது என்றிருந்தால், நாம் நீந்தக் கற்பது எங்கே? பெரிய வலிமையை திரட்டிக்கொண்ட பின்னரே போராட்டத்தில் இறங்க வேண்டும் என்று இருந்தால், போராட்டமே தொடங்கமுடியாது. உரிமைப் போராட்டங்களில், நமது வெற்றிகளை விட, தொடக்க நிலையில் நாம் அடைகின்ற இழப்பே நமக்குப் பெரிய ஆதரவைத் திரட்டித் தருகிறது!

''அற்ப நினைவுகள் இல்லா-ஓர்
அய்ந்தாறு தோழர்கள்
போதும்:
பற்பல விந்தைகள் செய்வேன்-
அவர்
பண்புத் துணையுடன் நானே!''

என்பதே, உரிமை இழந்தோருக்காகப் போராடியவர்களின் நோக்காகவும் குரலாகவும் இருந்து வந்துள்ளது.

மலையிலே வளர்ந்து சடைத்துக் கிடக்கும் புதர்களை அழிக்க விரும்புவோர் அவை எல்லாம் நன்றாகக் காய்ந்து உலரட்டும் என்று காத்திருப்பதில்லை; உலர்ந்துள்ள ஒரு பகுதிப் புதரில் நெருப்பை வைத்தால்,— அந்த நெருப்பின் வெம்மையிலேயே,— அண்டையிலுள்ள பச்சைப் பசும் புதரும் வாடி வதங்கி எரிவதற்குப் பதமாகி விடுகிறது! உரிமைப் பறிப்புக்கு எதிரான போராட்டமும் இதுபோன்றதே: போராட்டத்தின் தேவையை உணர்ந்த சிலர் எளிதாக அதைத் தொடங்கி விடும்போது,— உரிமை மறுப்பால் பாதிக்கப்பட்டும் உணர்ச்சியின்றிக் கிடந்த மற்ற மக்களும் ஒரு புதிய வேகம் கொண்டுவிடுகிறார்கள்;—அவர்களே போராட்டத்தை ஏற்று நடத்தவும் தொடங்கிவிடுகிறார்கள்!

**வேறு யாரிடம் சொல்வேன்!**

ஈழத்துச் சிறுபான்மையினரின் நலங்களைக் காக்கும் பணியிலேயே விழுப்புண்கள் பட்டுள்ள பெருந்தகையே! உங்களுக்குத் தெரியாத எதையும் நான் சொல்லிவிடவில்லை; அப்படி நினைத்துத் தலை கனத்துக்கொள்ளும் அகந்தை என்னிடம் இல்லை. இளைய நெஞ்சங்களின் பதைப்பையே,— 'நமது போராட்டம் தளர்ந்து போகுமோ?' என்று கருதி அவர்கள் வாடும் வாட்டத்தையே,— 'நமது வாழ்நாள் உரிமையற்ற நாளாகவே கழிந்துகொண்டிருக்கிறதே!' என்ற அவர்களின் ஏக்கத்தையே உங்கள் முன் படைத்தேன்.

என் குருதி இளமையானது; எளிதிலேயே சூடேறி விடுகிறது;—என்னுடைய முன்னோர்க்கு இழைக்கப்பட்டு என் மீதும் நிழலிடும் அநீதியைக் கண்டதுமோ, அது பொங்கிக் கொதிக்கிறது! அந்தக் கொதிப்பிலே என் பொறுமை கரைந்து விடுகிறது. 'பகையின் மேல் பாய்ந்து சாடி, உரிமையைப் பெறுவது அல்லது ஒழிந்து தொலைவது என்று திமிராமல் தின்னை வேதாந்தம் பேசிக்கொண்டு இருக்கிறோமே!' என்று குமுறுகிறது என் இளைய உள்ளம். அந்த உள்ளத்து உணர்ச்சியையே உங்கள் முன் படைத்தேன்.

தமிழர் நலப்போர்க்களத்தில் நின்று கொண்டிருக்கும் உங்களிடம்தான் நான் என் கொதிப்பைக்கொட்ட முடியும்; வீரரிடம் தானே போரைப் பற்றிப் பேச முடியும்? காய்த்த மரம்தான் கல்லெறிபடும் என்பார்கள். என்னுடைய கொதிப்பையும் குமுறலையும், தொண்டு செய்து கனிந்த உங்கள் முன்னேதான் நான் கொட்ட வேண்டியிருக்கிறது.

நீங்கள் செய்துள்ள பணிகளை நினைந்து நெஞ்சம் களிக்கிறேன்; ஆனாலும், இன்னும் விடுதலை வெளிச்சம் புலரவில்லையே 'என்ற எண்ணம், சாட்டையாக என்னையே நமது மக்களுக்கு சாடுகிறது. அந்த வேலையை, — விரைவுத் துடிப்பை,—

'சீக்கிரம் செல்லுக நேர்
வழியில,— அதைச்
செத்தைகள் கூடியே
தூர்க்குமுன்னே!'

என்று எழுகின்ற ஆத்திர உணர்வை,—வேறு யாரிடம் கொட்டித்தீர்ப்பேன், நான்?

**உரிமை நாள் உயர்க.**

தமிழர் நலக் காவலர்களின் நாயகமே! 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!' என்று சொல்லித்,—தன் வாழ்வையே மற்றொரு நல்லவனுக்குக் கொடுக்க முன்வந்தானும் பழைய தமிழன் ஒருவன். வாழ்வின் ஒவ்வொரு நாளையும் தமிழர் நலனுக்கே தந்து வந்துள்ள நீங்கள் அடுத்துக் காணப்போகும் ஒவ்வொரு நாளும் தமிழர் உரிமை பெருகிவரும் நாளாகப் பொலிக! — உரிமைப் போருக்கே புதிய எழுச்சியும் மலர்ச்சியும் ஊட்டுகின்ற சுடரொளியாக எழுக! அந்த நாள் ஒவ்வொன்றிலும், தமிழர்களின் உரிமைப் பெருமரம் மேன்மேலும் உயர்ந்து புதிய கிளைகள் பரப்புக; —வலிய விழுதுவேர்கள் ஊன்றுக...

அன்புடைய தம்பி,
காஞ்சித் தலைவன்

(தந்தை செல்வாவின் 75 வது பிறந்த நாள் மலருக்கு எழுதிய கட்டுரை)

## செல்வாவின் உருவச்சிலை!

தந்தை செல்வாவின் 75 வது பிறந்த நாளை முன்னிட்டு தந்தையின் 75 சிறு அளவு உருவச்சிலைகளை தமிழரசுக்கட்சியின் கொழும்புக்கிளை விநியோகித்து வருகிறது.. சில தேவையானோர் விலை விபரங்களுக்கு தமிழரசுக் கட்சி கொழும்புக்கிளையின் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் நஞ்சு!
# உதட்டில் தேன்!

அன்பு நண்பா,

நீதிமன்ற மொழி (சிறப்பு) ஏற்பாடுகள் மசோதாவையும் அந்த மசோதா மீது தேசிய அரசுப் பேரவையில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளையும் மசோதாவுக்கு அரசுதரப்பில் தரப்பட்டுள்ள விளக்கங்களையும் ஊன்றிக் கவனித்திடும்போது, புதிய அரசியல் சட்டத்தின்கீழ் தமிழ்த் தேசிய இனம் இந்நாட்டில் இன்று அடைந்திருக்கின்ற இழிநிலையும், தமிழ் மக்களை, சிங்களவர்கள் எத்துணை கேவலமாக—எத்துணை தூரம் இழிந்த நிலையில் வைத்துக் கணிக்கின்றார்கள் என்பதும் தெற்றென விளங்குகிறது!

இந்நாட்டின் ஏகபோக எஜமானர்கள் நாமே; நாம் மனமிரங்கிப் போடுகின்ற பிச்சையை, இடுகின்ற சலுகைகளை, ஏற்றுத் திருப்தியடையவேண்டியவர்களே தமிழர்கள்; என்கின்ற அகம்பாவம், ஆணவம், ஏகாதிபத்திய வெறி, சிங்கள மக்களின் தலைவர்களிடம் காணப்படுவதை அவர்கள் தேசியப் பேரவையில் நிகழ்த்திய உரைகள் திட்டவட்டமாக வெளிப்படுத்திவிட்டன!

நாம் போடுகின்ற பிச்சையை ஏற்று வாழவேண்டியவர்கள் தமிழர்கள்; அவர்களாக உரிமை என்று எதையும் கோரவும் முடியாது; கோரினாலும் கொடுக்கமாட்டோம்; தமிழ் மக்களுக்கு எதுவேண்டும், தமிழ் மக்கள் எப்படி வாழவேண்டும் என்பதை முடிவு செய்யவேண்டியவர்கள் நாங்களே—என்கின்ற ஆதிக்கத்திமிர் சிங்கள ஆட்சியாளர்களிடம் நீக்கமற நிறைந்து காணப்படுகிறது. இன்றைய ஆட்சியாளர்களிடம் மட்டும் அல்ல—சிங்களக் கட்சிகள் அனைத்தும் இதே ஏகாதிபத்திய இனவெறிப் போக்குடன்தான் செயல்படுகின்றன!

அரசியல் சட்டத்தின் மூலம் சிங்களமே நாடு முழுவதற்கும் ஆட்சி மொழி; சிங்களம் மட்டுமே நாடு முழுவதற்கும் நீதிமன்ற நிர்வாக மொழி; பௌத்த மதத்துக்கு மட்டுமே முதலிடமும் பாதுகாப்பும்! தமிழ் மக்களின் மொழிக்கு, மதத்துக்கு இத்தகைய அந்தஸ்து பாதுகாப்பு, எதையும் தரமறுத்து வருகிறது சிங்கள பெரும்பான்மை இனம்!

இதற்குக் காரணம் என்ன? அரசியல் சட்டத்தின்மூலம் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கினால் — உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்தால்—அது நிரந்தரமாக நின்று நிலைத்துவிடும்; தமிழ் இனம் தனித்துவத்துடன் இந்நாட்டில் வாழுகின்ற ஒருநிலை தோன்றிவிடும்! இந்த நிலை தோன்றுவதை — தமிழினம் தனித்துவத்துடன் தனி இனமாக இந்நாட்டில் தொடர்ந்து வாழுவதை எந்தச் சிங்களக் கட்சியும் துளியும் விரும்பிடவில்லை.

தமிழினத்தார் உரிமை உணர்ச்சிகொண்டு கிளர்ச்சிசெய்யும்போது—தாய்மார்கள் பால் பொங்கும்போது ஒரு துளி தண்ணீரைத் தெளித்து அதைத் தணிப்பதுபோல—சிறு சலுகைகளை, நிரந்தரமற்ற சலுகைகளை கொடுத்து தமிழினத்தை சாந்தப்படுத்திவிட முனைகின்றனர் சிங்களவர்கள்!

சலுகைகள் நிரந்தரமானவையல்ல—ஆட்சியிலிருக்கும் கட்சி விரும்பினால் வழங்கலாம் — விரும்பாவிட்டால் நிறுத்தலாம். ஆனால் உரிமைகள் அரசியல் சட்டரீதியாக வழங்கப்படுமானால், அவை நிரந்தரமாக இருக்கும். எந்த அரசாங்கமும் அதைப்பறித்திட முடியாது.

ஆனால், சிங்களக்கட்சிகள் அனைத்தினதும் இறுதி நோக்கம் ஒன்றேஒன்றுதான். இலங்கை முழுவதும தனிபௌத்த சிங்கள நாடாக வேண்டும் என்பதுதான் சிங்களவர்களின் ஒரே ஆசையாகும்; தமிழ் மக்களின் தொண்டைக்குள் மெல்ல மெல்ல சிங்களத்தைத் திணித்து, சிங்களத்தைப் படிக்கவைத்து—பௌத்த மதத்தைப் புகுத்தி — சிங்களக்கலாசாரத்தை நுழைத்து — தமிழினத்தின் தனித்துவத்தை நாளடைவில் அழித்து — தமிழர்களை சிங்களவர்களாக இனமாற்றம் செய்வதன் மூலம், இலங்கையை ஏகபௌத்த சிங்கள நாடாக்கலாம் என்று அவர்கள் கனவு காணுகிறார்கள்! இந்த நோக்கத்தை—இந்தச் சதித்திட்டத்தை மனதில் கொண்டுதான், தமிழ் மக்களுக்கு நிரந்தரமான உரிமைகள் எதையும் வழங்காமல் வெறும் கண்துடைப்பு சலுகைகளை வழங்குவதாக கூறி சால்ஜாப்பு காட்டுகிறார்கள் சிங்கள ஆட்சியாளர்கள்!

ஆம் நண்பா, இந்தச் சதித்திட்டத்தை பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவே பாராளுமன்றத்தில் ஒரு தடவை வெட்டவெளிச்சமாகக் கூறினார் — 'எமது இறுதி இலட்சியம் நாடு முழுவதற்கும் ஒரே யொரு உத்தியோக மொழியாக சிங்களம் இருக்கவேண்டும் என்பதுதான் — தமிழ் மக்கள் சிங்களமொழியில் தேர்ச்சிபெறுகிற வரை, ஒரு சில ஆண்டுகளுக்கு மட்டுமே தமிழ்மொழிக்கு சலுகையளிப்போம்' என்று அவர் மிகவும்வெளிப்படையாகவே இதைக் கூறியிருந்தார்.

இதுதான் சிங்களவர்களின் சதித்திட்டமாகும். இந்தத் திட்டத்தில், சிறீலங்கா சுதந்திரக்கட்சி மட்டுமல்ல, யூ. என். பி. யும் ஏனைய சிங்களக் கட்சிகளும் ஒன்றுபட்டு இணைந்தே இயங்கி வருகின்றன! தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் கூட நிரந்தரமானவையல்ல—அவர்கள்சிங்களமொழியில் புலமை பெறும் வரைதான் இந்தச் சலுகை—சிங்கள மொழியில் தேர்ச்சிபெற்றதும் தமிழுக்கு தரப்பட்டுள்ள சலுகைகள் வாபஸ் செய்யப் பட்டுவிடும். இத்தகைய நோக்கத்துடனேயே ஒரு சில சலுகைகள் இன்று வழங்கப்படுகின்றன.

இத்தகைய, நிரந்தரமற்ற தற்காலிக சலுகைதான், பிச்சைதான் — நீதிமன்ற (சிறப்பு) ஏற்பாடுகள் மசோதா என்று கூறுவேன்! அரசியல் சட்டத்தின் மூலம் தமிழ் இலங்கை உட்பட நாடு முழுவதற்கும் சிங்களமே நீதிமன்ற மொழியென்பது பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தைத் திருத்தி, சிங்களத்துடன் தமிழையும் நீதிமன்ற மொழியாக்கும்படி தமிழ் மக்கள் கோரி நிற்கிறார்கள்.

ஆனால் ஆட்சியாளரோ இக்கோரிக்கையை முற்றாக மறுத்துவிட்டு — வடக்கு, கிழக்கு மாகாணங்களில், நீதியமைச்சர் விரும்பினால், அப்படி அவர் விரும்புகிற நீதிமன்றங்களின் நிர்வாகத்தை தமிழில் நடத்த உத்தரவிடும் அதிகாரத்தை அவருக்கு அளிப்பதாக கூறும்

## அரசியல் மேடை

நீதிமன்ற சிறப்பு ஏற்பாடுகள் மசோதாவை கொண்டு வந்து நிறை வேற்றி வைத்துள்ளனர்.

இந்த மசோதா, தமிழினத்தின் உரிமைகள் எதையும் சட்டரீதியாக வழங்கவில்லை. நீதியமைச்சரின் கைகளில், அவரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றபடி—தமிழ் மொழியின் உரிமையைப் பயன்படுத்த உத்தரவிடும் அதிகாரமே வழங்கப்பட்டிருக்கிறது! தமிழ் மொழியின் உரிமையை வரையறைசெய்யும் அதிகாரம் ஓர் அமைச்சரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழியின் உரிமையை முடிவு செய்யும் பொறுப்பை ஓர் அமைச்சரின் கைகளில் ஒப்படைப்பதை தன்மானமுள்ள எந்தத் தமிழனாவது வரவேற்றிட முடியுமா? போற்ற முடியுமா?

நான் முதலில் கூறியதுபோன்று—காலகதியில் தமிழினத்தின் தனித்துவத்தை அழித்து—கபளீகரம் செய்து இலங்கை முழுவதையும் தனி சிங்கள பௌத்த நாடாக்கும் நச்சு எண்ணத்தை அடிநாக்கில் கொண்டுள்ள சிங்கள ஆட்சியாளர்கள், கண்துடைப்பு சலுகையென்னும் இனிப்பை நுனி நாக்கில் தடவி தமிழ் மக்களை ஏமாற்றிட முனைந்திருக்கிறார்கள்!

1958ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம், தமிழனை எவ்வளவு தூரம் தாழ்த்துகிறதோ—அதே போல, இந்த நீதிமன்ற மொழிச் சட்டமும் தமிழனைத் தாழ்த்துகிறது! 1958ம் ஆண்டுத் தமிழ் மொழிச் சட்டம் எப்படி இன்று வரை முறையாக அமுல் படுத்தப்படாது ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறதோ—அதே போல, இந்தச் சட்டமும் மூலைக்குள் போடப்படுவது நிச்சயம்!

அதுவும், முன்னைய நீதியமைச்சர் ஜெயமானேயைப்போல ஒருவர் நீதியமைச்சராக வந்தால் - ஜயமானே அன்று மூதவையில் கூறியதுபோல—'யார் இந்தத் தமிழர்கள்? நான் இதைச் சொல்கிறேனே என்று எனது வடக்கத்திய நண்பர் கோபிக்கக் கூடாது அதாவது இந்[illegible]பொருட்டு [illegible] படையெடுப்பை எதிர்த்து சிங்களவர் போரிட்டு வந்தார்களோ அந்த அந்நியபடையெடுப்பாளரின் சந்ததியினர்தான் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள். எனவே நான் முறித்து சொல்லி விடவேண்டியவனாயிருக்கிறேன். இப்பொழுது தமிழ் மக்களுக்கு சலுகைகள் வழங்கச் சிங்கள மக்களுக்கு சம்மதமில்லை' என்று கூறி விட்டு இருந்து விடுவார்! அந்நிலையில் தமிழ் மக்களின் கதியென்ன என்பதை அரசாங்கக் கட்சியில் ஒட்டியிருக்கும் யாராவது எண்ணிப்பார்த்தார்களா?

அதுமட்டுமல்ல நண்பா—அரசியல் சட்டத்தின்படி மூலச்சட்டங்கள் அனைத்தும் சிங்களத்திலேயே ஆக்கப்படவிருக்கின்றன. சட்டங்கள் அனைத்தும் சிங்களத்தில் இருக்கும் போது—தமிழில் விசாரணை நடத்துவது என்பது கேலிக்கூத்தாக முடியுமல்லவா? சட்டங்கள் அனைத்தும் சிங்களத்தில் இருக்குமென்றால் தமிழரான ஒவ்வொரு நீதிபதியும், வழக்கறிஞர்களும் சிங்களத்தில் சட்டங்களைப்படித்து விளங்கிகொள்ளுமளவுக்கு அந்த மொழியில் ஞானம் பெற்றிருக்கவேண்டியதும் அவசியமல்லவா? ஆகவே இதுவும் ஒரு கட்டாய சிங்களத் திணிப்பு என்பதில் எவ்வித தடையுமில்லை!

ஒரு சில நீதிமன்றங்களில் தமிழ் மொழிமூலம் விசாரணை நடத்தப்பட்டாலும்—தமிழர்களான நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் கட்டாயமாக சிங்களத்தைப் படித்தேயாக வேண்டிய நிலையை புதிய அரசியல் சட்டம் உருவாக்கியிருக்கிறது!

எனவே நண்பா, தமிழினம் அற்ப சலுகைகளைக்கண்டு ஏமாந்து விடக்கூடாது. சலுகைக்குள் புதையுண்டு கிடக்கும் கொடிய நஞ்சு இலங்கையை ஒரு தனி பௌத்த சிங்கள நாடாக்க வேண்டும் என்பதுதான்! அதனால் தான் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்காமல், சலுகைகள்தருவதாககூறி சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றுகிறார்கள்!

இந்த உண்மையை புரிந்துகொண்டு, விடுதலைப்பாதையில் தமிழினம் விரைந்து செல்ல வேண்டும். ஆட்சியாளர் தரும் சலுகைகள் தமிழினத்தை இலட்சியப்பாதையிலிருந்து இம்மியும் திசைதிருப்பாது!

வீரசுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? — என்றும்
ஆரமுதுண்ணுதற்காசைகொண்டோர் கள்ளில்
அறிவைச் செலுத்துவரோ?

விண்ணி லிரவிதனை விட்டுவிட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ!
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?

என்று மகாகவி பாரதி கூறியதுபோல — தமிழினம் இன்று சுதந்திரம் இழந்து—அடிமை இனமாக்கப்பட்டு இழிநிலையில் தள்ளப்பட்டு நிற்கிறது. இதிலிருந்து விடுபட்டு இன்ப சுதந்திரம் காண போராடுவது என்று உறுதியெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் தமிழ் இளைஞர்கள்! சுதந்திர சூரியனைக்கண்டிடப் போராடிவரும் தமிழினம் சலுகைகள் என்ற மின்மினியின் பக்கம் ஒரு போதும் திரும்பாது.

உன் அன்புத்தோழன்,

கோவை-மகேசன்

## அடிமைக்கு எசமானின் மறுமொழி!

"ஒற்றையாட்சி அமைப்புத்தான் இந்நாட்டில் தமிழர்களுக்கு சகலவித உரிமைகளும் சிங்களவர்களைப் போல் கிடைப்பதற்கு வழிவகுக்கும். இதனால் இறுதியில் இந்நாட்டில் தமிழ் மொழிக்கு சமஅந்தஸ்து கிடைப்பதற்கும் வழி பிறக்கும்."

— தேசிய பேரவையில் நீதிமன்ற மொழி சிறப்பு ஏற்பாடுகள் மசோதா விவாதத்தின் போது அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த வட்டுக்கோட்டை பா. உ. தியாகராசா பேசியது.

∴

"தமிழரசுக் கட்சிக்காரர்களின் இறுதிநோக்கம் தமது மொழிக்கு சமஅந்தஸ்து பெற வேண்டுமென்பதே. இதற்கு நாம் இடமளியோம். சமஅந்தஸ்து அளிக்க முடியாது. கடைசியாக இதனை நான் கூறி வைக்க விரும்புகிறேன்."

—மேற்படி விவாதத்தின் போது நீதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பேசியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## காங்கேசன்துறை இடைத் தேர்தல்

காங்கேசன்துறை தேசிய அரச பேரவையின் உறுப்பினராக இருந்து வந்த தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா, தமது உறுப்பினர் பதவியைத் துறந்து ஏறத்தாழ ஆறு மாதங்கள் முடிந்துவிட்டன.

ஆறு மாதங்களாகியும், அத்தொகுதியில் இடைத் தேர்தல் ஒன்றை நடத்தி, காங்கேசன்துறைத் தொகுதி வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதியைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை வழங்காமல், சனநாயக மரபுகளையும், மக்களின் உரிமைகளையும் ஆழக் குழி தோண்டிப்புதைத்து வருகிறார்கள் ஆட்சியாளர்கள்!

தந்தை செல்வா அவர்கள், ஒரு சாதாரண மனிதர் அல்லர்—இந்நாட்டிலுள்ள 35 இலட்சம் தமிழ் மக்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் உரிய தலைவர் அவர். தமிழினத்தின் ஏக சக்தியாகத் திகழும் தமிழர் கூட்டணியின் தலைவர் அவர். தமிழினத்தின் உணர்ச்சியின் சின்னமாகவும் விடுதலையெழுச்சியின் எடுத்துக்காட்டாகவும் விளங்குபவர் அவர். இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தை வழி நடத்துகின்ற பொறுப்புணர்ச்சிமிக்க அரசியல் மேதை அவர்.

அப்படிப்பட்ட பெரியவர் செல்வா அவர்கள், உணர்ச்சிவசப்பட்டோ விருப்புக்காகவோ, தமது பா. உ. பதவியை ராஜினமா செய்யவில்லை. மிகவும் அடிப்படையான ஒரு பிரச்சினையை — அரசியல் சட்டப்பிரச்சினையை முன் வைத்தே தமது பதவியை துறந்து அரசாங்கத்துக்கு சவால்விடுத்துள்ளார்.

புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது; தமிழ் மக்கள் ஏற்கவில்லை; நிராகரித்து விட்டார்கள் என்று நான் கூறுகிறேன். இதில் யார் சொல்வது சரியென்பதை கண்டறிய நானே அரசாங்கத்துக்கு சந்தர்ப்பம் தருகிறேன்— என்னுடைய தேசிய பேரவை உறுப்பினர் பதவியை ராஜினமா செய்கிறேன்-அதனல் காலியாகும் காங்கேசன்துறை தொகுதியில் அரசியல்சட்ட பிரச்சினையைமுன்வைத்து இடைத்தேர்தல் ஒன்றை அரசாங்கம் நடத்தட்டும் — அதில் அரசாங்கம் தனது வேட்பாளரை நிறுத்தட்டும்—நானும் தமிழர் கூட்டணி சார்பில் போட்டியிடுகிறேன்—சனநாயக முறைப்படி தமிழ் மக்களின் தீர்ப்பைக்கேட்போம் — என்பதே தந்தை செல்வா விடுத்த சவாலாகும்!

தந்தையின் நேர்மை மிகுந்த — துணிச்சலான இந்தச் சவாலை ஏற்றிட அஞ்சி, கடந்த ஆறு மாதகாலமாக இடைத்தேர்தலை நடத்தாது ஒத்தி வைத்து வருகிறது சிங்கள அரசு!

காங்கேசன்துறை இடைத்தேர்தலை, காங்கேசன் துறை வாக்காளர்கள் மட்டுமன்றி, இந்நாட்டுத் தமிழ்த்தேசிய இனம் முழுவதுமே எதிர் நோக்கிக் காத்திருக்கிறது. தமிழினம் மட்டுமல்ல — அகில உலகமுமே இந்த இடைத்தேர்தலில் தமிழ் மக்கள் அளிக்கவிருக்கின்றதீர்ப்பை அறிய ஆவலுள்ளதாக இருக்கிறது. இந்நிலையில் தந்தையின் சவாலை ஏற்று இடைத்தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல், ஆட்சியாளர்கள் தள்ளிப்போட்டு வருவதே அவர்களின் தார்மீகத் தோல்வியை எடுத்துக் காட்டிவிட்டது!

3-10-72ல் தந்தை செல்வா தமது பா. உ. பதவியைத் துறப்பதாக அறிவித்தார். 29-11-72ல் இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் தினமாக அறிவிக்கப்பட்டது. ஆனலும் திடுதிப்பென்று அது கைவிடப்பட்டு, இடைத்தேர்தல் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

இதற்கு அரசாங்கத்தரப்பில் கூறப்பட்ட காரணம் என்ன தெரியுமா? 'வடபகுதியில் வன்முறைச்சம்பவங்கள் நடைபெறுகின்றன; அரசாங்க ஆதரவாளர்கள் தாக்கப்படுகிறார்கள்—மனிதனை மனிதன் பிடித்துத்தின்னுவதைத் தவிர மற்றக்கொடுமைகள் எல்லாம் அங்கு நடக்கின்றன—' என்பதுதான்!

இது உண்மையானல்—வடக்கே அமைச்சர்களும் உதவியமைச்சர்களும் அண்மைக்காலமாக படையெடுத்துச் செல்கிறார்களே — அங்கு அவர்களுக்குப் பிரமாதமான வரவேற்புக்கள் அளிக்கப்படுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருகின்றனவே—அது எப்படி என்று கேட்கிறோம். ''மனிதனை மனிதன் பிடித்துச் சாப்பிடாததைத்தவிர'' ஏனைய கொடுமைகள் வடபகுதியில் உண்மையில் நடைபெறுமானல், அமைச்சர்களும், அரை அமைச்சர்களும் அங்கு சென்று பத்திரமாகத் திரும்புகிறார்களே, அது எப்படியென்று கேட்க விரும்புகிறோம்.

எனவே வடபகுதியில் வன்முறை நடப்பதாகப் பூச்சாண்டி காட்டி, இடைத்தேர்தலை மேலும் அரசாங்கம் ஒத்திவைப்பதற்கு எவ்வித முகாந்திரமுமில்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தென்னிலங்கையில் தெஸ்பாவ, நுவரெலியா, புத்தளம், இரத்தினபுரி ஆகிய நான்கு தொகுதிகளில் அரசாங்கம் இடைத்தேர்தலுக்கு நாள் குறித்தபோது—ஒரு தொகுதியில் அரசாங்கக் கட்சி வேட்பாளரே சுடப்பட்டார். அப்படியிருந்தும் அங்கு இடைத்தேர்தல் நிறுத்தப்படவில்லை. வன்முறை என்று காரணம் காட்டி ஒத்திவைக்கப்படவில்லை. இதுபோன்ற பயங்கர வன்முறைச் சம்பவம் எதுவும் காங்கேசன்துறைத் தொகுதியில் நடைபெற்றதாகவும் இல்லை. ஆனல் காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தல் மட்டும் காரணமின்றி ஒத்திவைக்கப்பட்டுவருகிறது!

அடிப்படை சனநாயக உரிமைகளை வழங்குவதிலும் தமிழ்ப்பகுதி, சிங்களப்பகுதி என்று அரசாங்கம் பாரபட்சம் காட்டுகிறதா என்ற சந்தேகம் இதனல் தமிழ் மக்களுக்கு ஏற்பட ஆரம்பித்துள்ளது.

எனவே அரசாங்கம் மேலும் காலதாமதமின்றி காங்கேசன்துறை இடைத் தேர்தலை உடனடியாக நடத்த நடவடிக்கையெடுக்கவேண்டும். தமிழரசுக்கட்சியினரையும் தமிழர் கூட்டணியினரையும் தமிழ் மக்கள் நிராகரித்து விட்டதாகவும், தங்களையே அவர்கள் இப்போது ஆதரிப்பதாகவும் அரசாங்கக் கட்சிப் பிரமுகர்களும், அமைச்சர்களும் மூச்சுக்கு முந்நூறுதரம் தம்பட்டம் அடித்துத் திரிகிறார்கள். இப்படி அடிக்கும் தம்பட்டம் உண்மையானல், இடைத் தேர்தலை நடத்துவதற்கு ஏன் தயங்குகிறீர்கள் என்று ஆளுங்கட்சியினரைக் கேட்கிறோம்! தேர்தலை நடத்தினல், தமிழ் மக்களின் தீர்ப்பு அறிந்த பின்னர் அவர்கள் தங்கள் பக்கமே என்று கூற முடியாமல் போய்விடும் என்பதே அரசாங்கத்தின் அச்சம் என்பது எமக்குத் தெரியும்.

உண்மை எப்பொழுதும் உண்மைதான். அதை எவ்வளவு காலம் சென்றாலும் மூடிமறைத்துவிட முடியாது. காங்கேசன்துறை இடைத்தேர்தலை மேலும் தாமதப்படுத்தி தமிழ் மக்களின் வெறுப்பையும் மேலும் அரசாங்கம் சம்பாதிப்பதைவிட தாமதமின்றி தேர்தலை நடத்த உரிய நடவடிக்கையெடுக்கும்படி சனநாயகத்தின் பேரால் பிரதமரிடம் கோருகிறோம்.

# குண்டர்களுடன் மட்டுநகரில் இராசன் ஆடிய துரோகக்கூத்து!

## தினபதியாரின் பின்னணிச் சதி அம்பலம்!

எந்த ஒரு நாட்டின் சுதந்திரப் போராட்ட வரலாற்றை எடுத்துப்பார்த்தாலும், சுதந்திரத்துக்குப் போராடுகின்ற மக்கள் மத்தியில்காட்டிக்கொடுக்கும் துரோகிகளும் ஒருசிலர் இருந்திருக்கவே செய்கிறார்கள் என்பதை அறிகிறோம். கட்டபொம்மனைக்காட்டிக்கொடுத்தான் ஒருஎட்டப்பன்—சங்கிலிமன்னனைக்காட்டிக்கொடுத்தான் ஒரு காக்கை வன்னியன். இதெல்லாம் வரலாறு.

தன்மான உணர்வோ, சுதந்திர உணர்வோ அற்ற சில சோற்றுலடித்த பிண்டங்கள், ஆதிக்கம் செலுத்துவோரை எதிர்க்க அஞ்சி, அவர்களை அண்டி கால்கழுவி குற்றேவல் செய்து, சுதந்திரத்துக்குப் போராடும்தன் சொந்த இனத்து வீரர்களையே காட்டிக்கொடுத்து-எசமான் போடுகின்ற எலும்புத்துண்டைசுவைத்து நக்கி, நாய்போல வாலை ஆட்டிக் கிடப்பதை இந்நாட்டிலும் கண்டு வருகிறோம்.

திருவாளர்கள் ஆ. தியாகராசா, சி. எக்ஸ். மாட்டின், சிமோல் அருளம்பலம், இராசன் செல்வநாயகம், வி. பொன்னம்பலம் குமாரசூரியர் போன்றோர் இந்த வகையினர் என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

### மானத்தை குழிதோண்டி புதைத்தார்

தனது எசமானின் மொழியாகிய சிங்களத்தில்பாராளுமன்றத்தில் ''பக்சாய்'' சொல்லி, சிங்கள எசமானர்களின் முகத்தில் குதூகலம் ஏற்படுவது கண்டு, அவர்களது குதூகலத்தில் கைலாசம் கண்டுவந்த இராசன் செல்வநாயகம், தனது குற்றேவல் தொழிலுக்குமகிமை சேர்ப்பதற்காகவும் சிங்கள எசமானர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும்கடந்த வாரம் ஒரு காரியம் செய்திருக்கிறார். மட்டக்களப்பு மண்ணின் மானத்தையும் அத்துடன் குழிதோண்டிப் புதைத்திருக்கிறார்.

வடபகுதிக்கு செல்லும் இன்றைய அரசின் அமைச்சர்கள், தமிழ்மக்கள் காட்டிவரும்எதிர்ப்புக் கண்டுஇன்று திணறிப்போயிருக்கிறார்கள். மொழி, இன உரிமைகளை பெறுவதற்கு தமிழினம் உறுதியுடன் போராடுவதைக் கண்டு அலமந்துபோகிறார்கள். கறுப்புக்கொடிகளைக் கண்டு கதிகலங்கிப்போகிறார்கள்.

### இதுவா பண்பாடு

இப்படி ஏக்கத்துடன்வடக்கிலிருந்து திரும்பும் தனது சிங்கள எசமானர்களின மனதில் மலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதற்காக, தன் இனத்தையே எதிர்க்கும் இழி செயலில் கடந்தவாரம் இறங்கியிருக்கிறார் இராசன் செல்வநாயகம்.

தனது கையாட்களை—ஒரு சில குண்டர்களை — கூலிக்கு மாரடிக்கும் விசிலடிச்சான் குஞ்சுகளை ஏவிவிட்டு, தமிழர் கூட்டணியின் ஒருசிலதலைவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டினராம் இராசன் செல்வநாயகம்!

கறுப்புக்கொடி காட்டுவதறகும் ஒரு கொள்கை வேண்டும்—ஒருமுறை வேண்டும். தர்மலிங்கமும் தங்கத்துரையும் வாடி வீட்டில்சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அவர்களைச் சுற்றி நின்று இராசனின் ஏவுதலினல் சில காடையர்கள்கறுப்புக்கொடிகளை பிடித்தார்களாம். சாப்பிடும் போதா ஒருவருக்கு கறுப்புக் கொடி பிடிப்பது? இதுவா பண்பாடு?

### தனக்குத்தானே தமிழ்த்துரோகிப் பட்டம்!

தமிழ்த்துரோகிகள் ஒழிக! எட்டப்பர்கள் ஒழிக என்று குண்டர்கள் நிறைபோதையில் சத்தம்போட்டுச்செல்ல பின்னல் தமிழ் மக்களால் துரோகியெனக்கருதப் படும் இராசன் செல்வநாயகம் மோட்டாரில் வந்த காட்சி பொருத்தமான காட்சியாக இருந்தது. தனக்குத்தானே கறுப்புக்கொடி காட்டிக் கொள்ளுகிறார் இராசன் செல்வநாயகம் என மக்கள் பேசிக்கொண்டனர்.

இப்படி இனத்தைக் காட்டிக்கொடுத்து—மொழியைக் காட்டிக்கொடுத்து இராசன் செல்வநாயகம் பெறப் போகும் நன்மை என்ன? ஒரே இனத்திலுள்ள சொந்தச் சகோதரர்களை, கிழக்கு, வடக்கு என்று பிரிந்து பிளவு படுத்திட இராசன் கனவு காண்பாரானல் அது ஒரு போதும் முடியாது என்று கூறி வைக்கவிரும்புகிறோம்.

இராசன் செல்வநாயகம் தனது ஈனத்தனமான போக்கினல் சிங்களத்தலைவர்களின் பாராட்டை இன்று பெறலாம், ஆனல் காலம் காலமாக அவனரயும் அவரது குடும்பத்தையும் உணர்ச்சிமிக்க தமிழர் சமுதாயம் ஒதுக்கி வைப்பது நிச்சயம்! இதை நினைத்து இராசன் கண்ணீர் விடாவிட்டாலும் அவரது வருங்காலச் சந்ததி நிச்சயம் கண்ணீர் வடிக்கும்!

### தினபதியாரின் பங்கு

இராசனுக்கு இது விஷயத்தில் உசார் ஊட்டித்தட்டிக் கொடுத்தவர் தினபதி ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் அவர்களேயென்று அறியப்படுகிறது. தினபதியைத் தவிர வேறு எந்த நாளேடும் இது விஷயத்தில் மும்முரமாக நிற்கவில்லை.

கொழும்பிலிருந்து தினபதியார் விடுத்த வேண்டுகோள்படி தினபதிக்குப் படம் எடுப்பதறகாகத்தான் —முதலில் கறுப்புக்கொடி காட்டி விட்டு சென்ற இராசனின் குண்டர்கள், இரண்டாந்தரம் திரும்பவும் வந்து சாப்பாட்டு மேசையைச் சுற்றி நின்று கறுப்புக்கொடி காட்டுவது போல படத்துக்கு 'போஸ்' கொடுத்தார்கள். படம் எடுத்து முடிந்ததும் கலைந்துபோய் விட்டார்கள்.

தினபதி செய்தி வெளியிட்டது போல—மட்டக்களப்பில் எங்கும் எந்த ஒரு கட்டத்திலும் தந்தைசெல்வா அவர்களுக்கு கறுப்புக் கொடி காட்டப்படவில்லை.

கறுப்புக்கொடி செய்திகள் பற்றி தினபதியில் வெளியிடப்பட்ட செய்திகள் அப்பத்திரிகையின் மட்டக்களப்பு நிருபரால் எழுதப்

( 7-ம் பக்கம் பார்க்க )

### ஒரு கட்சியின் இருமுகங்கள்!

'இந்தநாட்டில் உள்ள மக்கள் அனைவருக்கும் சகல உரிமைகளும் பொதுவானதாகவும் சமத்துவமானதாகவும் இருக்க வேண்டும். எந்த இனத்திலும் உரிமைகள் கட்டுப்பட்டதாகவோ மற்ற இனத்தினது உரிமைகளைவிடக்கூடியதாகவோ குறைந்ததாகவோ இருக்கச்செய்வது அல்ல எமது எண்ணம். அது எமது கொள்கையும் அல்ல.'

—பேரவையில் நீதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பேசியது. (23-3-73ல் தேசிய பேரவையில்.)

ஃ ஃ

'தமிழர்களின் தாய் நாடான இந்தியாவில் கூட தமிழ் மொழிக்கு சம அந்தஸ்தோ உத்தியோக பூர்வமான மொழிக்குரிய அந்தஸ்தோ வழங்கப்படவில்லை இங்கு வந்து எங்கள்நாட்டை ஆக்கிரமித்துக்கொண்ட தமிழர்களுக்கு தங்கள் மொழிக்கு உரிமை கேட்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை.'

—அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த கலிகமுவ பா. உ. திரு. பீ. பீ. பாலசூரியா 22-3-73ல் தேசிய பேரவையில் பேசியது.

### இரண்டையும் அவரே சொன்னார்!

திருச்செல்வம் அமைச்சராக இருந்தபோது தமிழரசுக் கட்சியினர் சிங்களத்தை அரசகரும மொழியாக ஏற்றுக் கொண்டுவிட்டார்கள்.'

—தேசிய பேரவையில் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, (23-3-73)

ஃ ஃ

'தமிழரசுக் கட்சிக்காரரின் இறுதி நோக்கம் தமது மொழிக்கு சம அந்தஸ்து பெற வேண்டும் என்பதே, ஒரு போதும் இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். சம அந்தஸ்து அளிக்க முடியாது.'

—அதே பேச்சில் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மொழிப் பாடசாலைகளை அன்றே நாங்கள் எதிர்த்தோம்!

## தமிழ்மொழி மூலம் பாடசாலைகளை சிங்கள மயமாக்குவது இந்த அரசே!

## கல்வியமைச்சின் பொய்க்கூற்றை பேரவையில் கிழித்தெறிந்தார் கதிர்!



புத்தூர் பகுதியில் உள்ள மூன்று பாடசாலைகளையும் சிங்களமொழிப் பாடசாலைகளாகமாற்றுவதற்கு தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்துடன் இருந்த காலத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையென்ற கல்வியமைச்சரின் பொய்யை தேசிய பேரவையில் வைத்து உடைத்தெறிந்தார் கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை.

1969ம் ஆண்டில் தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவில்லையென்பதை எடுத்துக்காட்டிய திரு. கதிரவேற்பிள்ளை, குறித்த பௌத்த பாடசாலைகள் சம்பந்தமாக அன்றே தமிழரசுக்கட்சி பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தது என்பதற்கு அன்றைய பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பேடுகளே தகுந்த ஆதாரமாக இருக்கின்றன என்றும் எடுத்துரைத்தார்.

திரு. கதிரவேற்பிள்ளையின் கூற்றுக்கு உடனடியாகப் பதிலளிக்க வக்கில்லாத கல்வியமைச்சர், இது சம்பந்தமாகக் கவனித்துப் பின்னர் பதிலளிப்பதாக தப்பித்துக்கொண்டார்.

இது சம்பந்தமாக திரு. கதிரவேற்பிள்ளை மேலும் சபையில் கூறியதாவது:-

''புத்தூர் பாடசாலை போதனாமொழி விடயமாக அண்மையில் கல்வியமைச்சு ஓர் அறிக்கையை விடுத்திருந்தது. இது அமைச்சிலுள்ள 'பைல்'களைப் பார்த்து தயாரிக்கப்பட்ட அறிக்கையாக காணப்படவில்லை. அமைச்சிலுள்ள 'பைல்'களைப் பார்த்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்குமானால், அதில் உண்மைக்குமாறானதும், பொய்யானதுமான கருத்துக்கள் இடம் பெற்றிருக்கமுடியாது.

'தமிழரசுக்கட்சியினராகிய நாம், தேசிய அரசாங்கத்தில் ஓர் உறுப்பாக அங்கம் வகித்த காலத்திலேயே இப்பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றதென்றும், அப்போது நாங்கள் இதை ஏன் எதிர்க்கவில்லையென்றும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டிருந்தது. இது முழுப் பொய்.

''புத்தூர் பகுதியிலுள்ள பிரச்சினைக்குரிய இப்பாடசாலைகள் நிறுவப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் 1966ம் ஆண்டளவில் சில தனிப்பட்டவர்களால் எடுக்கப்பட்ட போதிலும், 1969ம் ஆண்டுதான் இந்தப் பாடசாலைகள் அன்றைய கல்வியமைச்சரால் பொறுப்பேற்கப்பட்டன. அந்தச்சமயத்தில் நாம் அந்த அரசாங்கத்தில் இருக்கவில்லை;

'இந்தப் பாடசாலைகளை சிங்களப் போதனாமொழிப் பாடசாலைகளாக மாற்றுவதை நாம் அன்று எதிர்க்கவில்லையென்றும் கூறுகிறது கல்வியமைச்சின் அறிக்கை. இதுவும் முழுப் பொய்யான கூற்றாகும்.

'இந்தப் பாடசாலைகளை சிங்களப் போதனாமொழிப் பாடசாலைகளாக மாற்றுவதற்கு பெற்றாரின் ஆதரவைத் திரட்டுவதற்கென கல்வியமைச்சிலிருந்து திரு. குலதுங்கா என்ற அதிகாரி அப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். திரு. குலதுங்கா, அங்கு சென்று பெற்றார்களிடம் சிங்களப் பாடபோதனைக்கு சார்பாக கையெழுத்து வாங்க முயற்சியெடுத்த பொழுது நாம் அதைப் பலமாக எதிர்த்தோம். ஆட்சேபித்தோம். கீழ்க்கண்ட தந்தியை, அன்றைய வட்டுக்கோட்டை பா. உ. அமிர்தலிங்கம், உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம், கா. பொ. இரத்தினம் பா. உ., ஆகியோருடன் நானும் கையெழுத்திட்டு, திரு. குலதிலகா கையெழுத்து வேட்டை நடத்திக்கொண்டிருந்த பொழுதே 1969ம் ஆண்டு மேத் திங்கள் 24ம் திகதி அவருக்கு அனுப்பினோம்: அத்தந்தியின் வாசகம் வருமாறு:-

"Understand you are obtaining signatures from unsuspecting persons in order to convert three Tamil schools into Sinhala Medium Schools. Your action illegal and will inflame communal feeling. Request stop this action immediately. We are already complained to the P. M. about your illegal action."

['மூன்று தமிழ் போதனாமொழிப் பாடசாலைகளை சிங்கள மொழிப்பாடசாலைகளாக மாற்றுவதற்கு அப்பாவிகளான மக்களிடமிருந்து நீங்கள் கையெழுத்து வாங்குவதாக அறிகிறோம். உங்கள் நடவடிக்கை சட்ட விரோதமானதும், இன உணர்ச்சியைத் தூண்டக்கூடியதுமாகும். உடனடியாக இந்த நடவடிக்கையை கைவிடும்படி கோருகிறோம். உங்கள் சட்ட விரோத நடவடிக்கை பற்றி நாங்கள் ஏற்கெனவே பிரதமரிடம் முறையிட்டுள்ளோம்']

'இத்தந்தியின் பிரதிகளை பிரதமருக்கும் கல்வியமைச்சருக்கும் அனுப்பியிருந்தோம். இதையடுத்து இப்பிரச்சினை சம்பந்தமாக அன்றைய பிரதமர் விசாரணையொன்றை நடத்தினார். இவ்விசாரணையும் திருப்திகரமாக இல்லாமல் போகவே, அன்றைய வட்டுக்கோட்டை பா. உ.வும் தமிழரசுக் கட்சி பொதுச்செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் இது பற்றி விபரமாக விளக்கி பிரதமருக்கு ஓர் கடிதம் எழுதினார். அதன் பிரதி என்னிடம் இருக்கிறது.

இதன் பின்னர், 1969ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் திகதி இப்பிரச்சினை சம்பந்தமாக பாராளுமன்றத்தில் மிகவும் விளக்கமாகப்பேசினார். அப்பேச்சில் இப்பாடசாலைகளை சிங்கள மொழிப் பாடசாலைகளாக மாற்றும் முயற்சியை கடுமையாகக் கண்டித்துப் பேசினார். இது பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பேட்டில் இன்றும் இருக்கிறது.

இவ்வளவு தூரம் இப்பிரச்சினை விவாதிக்கப்பட்ட பின்னர், எங்கள் ஆட்சேபனையை அன்றைய கல்வி

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க்கிழவா! தானைத் தலைவா! தந்தை செல்வா! ஆணையிடு!

## தங்கஈழம் காண இளைஞர்படை தயார்!

**எஸ். ஜே. வி. ராஜகுமார்**

தள்ளாடும் வயது. ஆனால் தணியாத விடுதலைத்தாகம். தளராத உள்ளம். மெலிந்த தோற்றம், ஆனால் மென்மையான இதயம். உறுதியற்ற உடல் நலம், ஆனால் உறுதியான கொள்கை. தள்ளாடும் உருவம், ஆனால் தர்மத்தின் தலைவன். பண்பின் சிகரம், சாந்தியே உருவான ஒப்பற்ற தலைவர் நேர்மையின் சின்னம். எதிரிகளின் நண்பன். அண்ணல் காந்தியின் சாயல் கொண்டவர். அஹிம்சையில் அசையாத நம்பிக்கை உள்ளவர். வரட்டுத்தத்துவம் பேசுவோரை விரட்டி விரட்டி வண்டமிழை வாழவைப்பவர். தன் இயக்கத்தில் ஈடுபட்டோருக்கு என்ன இன்னல் வந்தாலும் ஓடோடிச் செல்பவர் ஒப்பற்ற ஜனநாயகவாதி. தெய்வபக்தி உள்ளவர் தமிழினத்தின் வாழ்வுக்காக தன் உடல் பொருள் அத்தனையும் இழந்தவர். மாற்றாரும் மதிக்கும் மதியூகி. பதவியை துச்சமாக மதித்து பணியே எனக்கு பெரிது என்று வாழ்ந்து கொண்டிருக்கும் கிழவனுக்கு 75வயதாம். நம்பவே முடியவில்லை. இந்த வயதில் கூட பொல்லாத சிங்கள ஆட்சிக்கு எதிராகபோர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்.

அதுமட்டுமா?. நாடாளுமன்றத்தில் தன் சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி, தந்தையவர்கள் ஆற்றிடும் உரையெல்லாம், தமிழினத்தின் வரலாறு காணாத வீர உரையன்றோ? தந்தையவர்களை கிழவன் கிழவன் என்று அழைப்பதில் தமிழினமும், காங்கேசன்துறை தொகுதி வாக்காளரும், பெருமையடைகிறார்கள்.

தேர்தல் சமயத்தில் கூட யாருக்கு வாக்களிக்கிறீர்கள் என்று கேட்டால், கிழவனுக்குத் தான் என்று கட்டிளங்காளையும், கன்னியரும், கூறுவர். அவ்வளவுக்கு 'கிழவன்' என்று அழைப்பதில் எல்லோருக்கும் தந்தை மீது ஒரு பாசம், உணர்ச்சி அத்தனையும் அடங்கி நிற்கிறது.

தம்பி, நாளை தமிழுரிமை போராட்டத்தில் தலைகொடுக்க ஆயத்தமாய் இரு என்று தந்தை கட்டளையிட்டால், தம்பி மட்டுமல்ல, தமிழினமே பொங்கி எழும். சுருக்கமாக சொல்லப்போனால் தமிழ் படையின் கப்டன் தான் தந்தை.

தந்தையின் தியாகம் தமிழினத்தின் நல்வாழ்வுக்காக கிழவன் எத்தனையோ இன்னல்களைஏற்றார். தமிழ்பேசும் மக்களை உணர்ச்சியுள்ள மக்களாக மாற்றியவர் இந்தக் கிழவன்தான். தமிழரசுக் கட்சியை ஆதரிப்பவர்கள் அனைவருக்கும் தந்தையினது நேர்மையில் ஒரு பாசம். இந்தக் கிழவன் தான் தமிழினத்துக்கு தேவையான உணர்ச்சியை ஊட்டினார். தமிழரசு கட்சியை தமிழினத்துக்கு விமோசனம் அளிக்கக்கூடிய, நல்ல கொள்கைகளை உருவாக்கியவர் தந்தைதான்.

பலவகை போராட்டங்களின் மூலம் எத்தனையோ உயிர்களை பலி கொடுத்து விடுதலைஇயக்கத்துக்குவேண்டிய தியாகத்தை, ஊட்டியவர் கிழவன்தான். எமது உரிமை, கலை, கலாச்சாரத்தை, பண்பாட்டை, பிரதேசத்தை காப்பாற்றுவதற்காகவும், சிங்கள மொழி இருக்கும் அதே அந்தஸ்து தமிழுக்கும் கிடைப்பதற்காக, வரலாறு காணாத பல போராட்டங்களுக்கு தானைத் தலைவராக விளங்கியவர் தந்தை செல்வா தான்.

56-ம் ஆண்டு தனிச்சிங்கள சட்டத்தால் தமிழ் மொழியின் குரல்வளை நெரிக்கப்பட்டபொழுது, காலிமுகத்திடலில் கல்லடியும், பொல்லடியும், பெற்றது இந்த நடுங்கும் கிழவன்தான்! காந்திகூட தனது போராட்டத்தை இங்கிலாந்தில் நடத்தியதில்லை. ஆனால் கிழவனே சிங்கள மக்கள் மத்தியில் போய் போராட்டம் நடத்தியபடியால், ஈழத்தின் நெப்போலியன் இந்த நடுங்கும் கிழவன்தான்.

சிங்கள சீறி எதிர்ப்பு போராட்டத்தை நடத்தி, சிறையில் வாடியதும் செல்வாதான்; ஆட்சியாளரின் அட்டகாசத்தை எதிர்த்து சட்டமறுப்பு இயக்கத்தில், பல்லாயிரம் தொண்டர்களை சிறைக்கு அனுப்பி, சிங்கள ஆட்சியின் சின்னத்தனத்தை உலகறியச் செய்தவர் தந்தை செல்வாதான்.

61-ம் ஆண்டு உலகமே வியக்கும் வண்ணம் மாபெரும் போராட்டத்தை நடத்தியவர் இந்தக் கிழவன் தான். மூன்றுமாத காலமாக சரித்திரத்தில் நினைத்துக்கூட பார்க்கமுடியாத அளவுக்கு அம்மாவின் ஆட்சி செயலிழந்து, ஸ்தம்பிதம் அடைந்தது. இதனைச் சாதித்தது தந்தையின் தலைமையில் இயங்கும் தமிழரசுக்கட்சியே.

சரித்திரம் காணாத விடுதலை இயக்கத்தையும் எதிர்ப்பியக்கத்தையும் நடத்தி தமிழனை தட்டி எழுப்பியவர் இந்த உடல்நலம் கெட்ட கிழவன்தான்.

தமிழரசு சிறப்பு மாநாட்டில் செல்வா அளித்த செந்தமிழ் உறுதியை கண்டு, மாற்றார்கூட அதிசயத்தனர். "எனக்கு இப்போ 73 வயதாகி விட்டது. எனக்கு பேச்சுவல்லபம் குறைந்து விட்டது. ஆயினும் தமிழரசு இயக்கத்தை தொடங்கிய போது, எனக்கிருந்த துணிவு இன்னும் அப்படியே தான் [illegible] தயாராக இருக்கிறேன். எனது மீதிக்காலத்தை சிறையில் கழிக்கவும் நான் சித்தமாகி விட்டேன்."

ஈழத்து காந்தியின் வாயில் இப்படி ஒரு உறுதியைக் கண்டு உள்ளபடியே எல்லாரும் மகிழ்கிறோம்.

3-10-72 தமிழர்கள் மனதில் என்றுமே மறக்கமுடியாத நாள். சரித்திரம் காணாத திருநாள். கொள்கை காக்க வந்த எங்கள் குலவிளக்கு, கொள்கையற்றவர்களுக்கு கொள்கையுடன் போட்டியிடும் படி அழைப்புவிட்ட நாள், கொள்கை வேந்தன் தனது பதவியை தமிழினத்தின் நல்வாழ்வுக்காக, துறந்து, தமிழினம் கோருவது சுயநிர்ணய உரிமை. இதுவே எனது கொள்கை. முடியுமானால் எதிர்த்து போட்டியிட்டுப் பாருங்கள். உங்கள் அடிமை சாசனத்துக்கு தமிழ் மக்களின் ஆதரவை பாருங்கள். நான் தோல்வி அடைந்தால் எனது கொள்கைகளை அன்றே கைவிடுகிறேன். நீங்கள் தோற்றால் தமிழ் மக்களின் உரிமைகளை மட்டும் தாருங்கள் என்றார். இத்தகைய தீரம் வேறு யாருக்கு வரும்?

தந்தையே! தாங்கள் வாழும் காலத்தில் நாங்கள் வாழ்வதையிட்டு பெருமையடைகிறோம்.

தங்களது பிறந்த நாளான இன்று, தமிழ் தாயின் மீது ஆணையிட்டு, தங்கமான சபதம் ஒன்றை தமிழ் இளைஞராகிய நாம் எடுக்கிறோம். தந்தையே தங்க ஈழம் காண தவிக்கின்றோம் ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள். தானையை ஏற்றிடுக தந்தையே! கட்டளையை இட்டு விட்டால், தலைபோனாலும் பரவாயில்லை, தயங்காமல் தமிழ் ஈழம் அமைத்து, தங்க ஈழத்தின் முதல்வராக தங்களை கண்ட பின்பு, இந்த உடல் இருந்தாலும், இறந்தாலும் ஒன்றுதான். தந்தையே 75 வயது மட்டுமல்ல, இன்னும் 75 ஆண்டு வாழ்க என வாழ்த்தி, எங்கள் சபதத்தை விரைவில் ஏற்று செயல்படுத்துங்கள். தங்கள் பிறந்த நாளில் நாம் விடுக்கும் வேண்டுகோள் இது தான். வாழ்க செல்வா! வாழ்க தமிழ்! காண்போம் தமிழ் ஈழம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# “அரசமைப்பில் சிங்களத்துக்கு தரப்பட்டுள்ள அதே இடம் தமிழுக்கும் தரப்படவேண்டும்!

# இதற்கு குறைந்த எந்த நிலையையும் தமிழினம் ஏற்காது!

“இலங்கையின் புதிய அரசியல் சட்டத்தில் சிங்களமொழிக்குரிய உரிமைகள் எவ்வாறு பொறிக்கப்பட்டுள்ளதோ அதே போல்—அரசியல் சட்டத்தில் தமிழ்மொழியின் உரிமைகளும் பொறிக்கப்படவேண்டுமென்பதுதான் இந்நாட்டில் வாழுகின்ற தமிழ்த்தேசிய இனத்தினரின் ஒன்றுபட்ட கோரிக்கையாகும்.

“தமிழ் தேசிய இனத்தின் இந்தக்கோரிக்கையை, நீதி அமைச்சரினால் இச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நீதிமன்றமொழி (விசேட ஏற்பாடுகள்) மசோதா எவ்வகையிலும் பூர்த்தி செய்யவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லா நீதிமன்றங்களிலும் தமிழ் நீதிமன்றமொழி என்று கூட இந்த மசோதா பிரகடனப்படுத்தவில்லை.

“இந்த மசோதா, நீதியமைச்சருக்கு விசேட அதிகாரங்களைக் கொடுப்பதாக இருக்கிறதேதவிர தமிழினத்தின் உரிமைகளை வழங்கவில்லை. நீதி அமைச்சர் விரும்பினால், அவர் விரும்புகிற சில குறிப்பிட்ட நீதிமன்றங்களில் மட்டும் தமிழை உபயோகிக்க உத்தரவிடவே இந்த மசோதா வசதி செய்கிறது. இம்மசோதா தமிழினத்தின் உரிமைகளை வழங்குவதாக யாரும் கூறமுடியாது.

தமிழ் மக்கள் அரசியல் சட்டத்திலிடம்பெறுகின்ற அடிப்படை உரிமைகள் மூலம் ஆளப்படவேண்டுமே தவிர, அமைச்சர் இடும் பிச்சையை, சலுகையை நம்பி இந்நாட்டில் வாழமுடியாது. ஆளப்படும் இனமாக வாழத் தமிழினம் தயாரில்லை. எனவே இந்த மசோதாவை மானமுள்ள எந்தத்தமிழனும் ஏற்கமாட்டான். சலுகைகளை நாம் கேட்கவில்லை.

நீதிமன்ற மொழி விடயத்தில் மட்டுமல்ல—நிர்வாக மொழி போதனாமொழி போன்ற தமிழினத்தின் அனைத்துப்பிரச்சினைகளையும் திர்ப்பதாக அரசியல் சட்டம் திருத்தியமைக்கப்படவேண்டும். அதுவரை தமிழர்கள் திருப்தியடையமாட்டார்கள்.

—இவ்வாறு தேசிய பேரவையில் உரை நிகழ்த்திய உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

நீதிமன்றமொழி சிறப்பு ஏற்பாடுகள் மசோதா மீது 22-3-73ல் திரு. தர்மலிங்கம் பேசியபோது மேலும் கூறியதாவது:-

‘இந்த மசோதா அமைச்சர் தாம் விரும்பிய மாதிரி உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கே வழி வகுக்கிறது. இந்த மசோதா வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள எல்லா நீதிமன்றங்களிலும் தமிழை உபயோகிக்க வழி வகுக்கவில்லை.

‘இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் தாம் அரசமைப்பினால் ஆளப்படவேண்டும் என்று விரும்புகிறார்களே ஒழிய, அமைச்சர் ஒருவரின் விருப்பத்திற்கேற்ப கொண்டு வரப்படும் ஒரு சட்டத்தால் ஆளப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. எனவேதான் இதை நாங்கள் எதிர்க்கிறோம்.

‘அரசமைப்புச் சட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நீதிமன்றமொழி என்ன என்பதைத் திட்டவட்டமாகக் கூறவில்லை. இதை அமைச்சரே ஏற்றுக் கொண்டார்.

‘வடக்கு, கிழக்க மாகாண நீதிமன்றங்கள் தமிழில் செயல்படலாம் என்பதை இந்தப் பேரவை தீர்மானித்தாலும் ஓரளவு பரவாயில்லை. ஆனால் நிலைமை அப்படி இல்லை. அமைச்சர் ஒருவருக்கு இதைத் தீர்மானிக்கும் பொறுப்பை இம்மசோதா அளிக்கிறது. இது முறையற்றது.

‘அரசமைப்பு நிர்ணய சபையில் அரசமைப்பிலுள்ள பாகுபாடுகளை நாங்கள் விளக்கமாக எடுத்துக் கூறினோம். சிங்கள மொழி



## தேசியப் பேரவையில் உடுவில் பா. உ.

க்கு உள்ள இடம் தமிழ் மொழிக்கும் வேண்டும் அதுதான் எமக்குத் தேவை.

‘ஒரு மொழிக்கு அரசமைப்பே உத்தரவாதம் அளிக்கையில், மற்றைய மொழியான தமிழ்மொழிக்கு உரிய இடத்தை இந்தப் பேரவை வழங்கும் எனக் கூறுவதை நாம் ஏற்போமானால் நாங்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் என்பதை நாங்களே ஏற்றுக்கொண்டவர்களாவோம்.

அரசமைப்பில் சிங்களத்திற்குள்ள இடத்தை தமிழ் மொழிக்கு அளிக்காமைக்குக் காரணம் என்ன என்பதை அரசாங்கத்தின் சார்பில் எவரும் எடுத்துக் கூறவில்லை. ஆளுகின்ற இனம் சிங்கள இனம். ஆளப்படும் இனம் தமிழினம் என்ற இறுமாப்பில்தான் நீங்கள் தமிழுக்கு உரிய இடத்தை அளிக்கவில்லை.

‘உங்கள் இந்தக்கொள்கையைத் தன்மானமுள்ள தமிழ் மகன் எவனும் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

‘அமைச்சர் விரும்பிய மாதிரிதான் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் தமிழை உபயோகிக்கலாம். அவருக்கு நாம் கறுப்புக்கொடி காட்டினால் அவர் தமிழ்மொழியை உபயோகப்படுத்தக் கூடாது என்று உத்தரவிடலாம்.

1960ம் ஆண்டு இருந்த சுதந்திரக்கட்சி அரசாங்கம் அவசர அவசரமாக ஒரு நாள் முழுவதும் விவாதித்து சிங்களத்தை நீதிமன்றமொழியாக்கும் சட்டத்தை நிறைவேற்றியது. அப்படி நிறைவேற்றியும், அந்தச் சட்டத்தை அது பதவியிலிருந்த 1965ம் ஆண்டு வரை அமுல் நடத்த நடவடிக்கையெடுக்கவில்லை. அதேபோல இந்த மசோதாவையும் அரசாங்கம் நிறைவேற்றி விட்டு அப்படியே ஐஸ் பெட்டிக்குள் போட்டு விடக் கூடும்!

‘தபால் அமைச்சர் எங்கு உரை நிகழ்த்தினாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பத்து லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களது வாயிலே மண்ணை அள்ளித் தமிழரசுக் கட்சியினர் போடுகின்றனர் என்று சொல்வார். அப்படியானால் அந்தப் பத்து லட்சம் மக்களுக்கும் இந்தச் சட்டம் எப்படி உதவுமென்று தபால் அமைச்சரை நான் கேட்க விரும்புகிறேன்.’

தபால் அமைச்சர்:- பத்து லட்சம் மக்கள் வட பகுதியில்தான் உள்ளனர். 22 லட்சம் மக்கள்தான் வெளியே.’

தர்மலிங்கம்:- ‘எப்படியானாலும் இந்த 22லட்சம் தமிழ் மக்களுக்கும இந்த மசோதா எப்படி உரிமையைக்கொடுக்கும்? யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட வழக்கின் அப்பீல் ஒன்றை கொழும்பில் நடத்துவதானால் சிங்களத்தில் தான் நடத்தவேண்டும் ஏன் இந்தப் பாகுபாகு?

இம்மசோதா வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 6000 அல்லது 7000 சிங்களவர்களுக்கு பூரண பாதுகாப்பு அளிக்கின்றது. எனினும் இம் மசோதா வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வாழும் 22 லட்சத்து 50ஆயிரம் தமிழ் மக்களின் வாயில் மண்ணை அள்ளிப்போட்டு விட்டது.

‘வடக்கு, கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள தமிழர்கள் எவ்வளவு தூரம் இந்த மசோதாவினால் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தபால் அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன்.

‘தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் என்ன உரிமை இருக்கும் என்பதை அரசியல் சட்டத்தில் திட்டவட்டமாக எடுத்துக் கூறவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இந்த அரசாங்கம் தமிழ் மக்களை எந்த வகையிலும் திருப்திப்படுத்த முடியாது.

## ‘ஒப்சேவருக்கு’ கறுப்புக்கொடி செய்திபோனது எப்படி!

‘வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வருகின்ற அமைச்சர்களுக்கு நாம் கறுப்புக்கொடி காட்டுகிறோமென்றால், அதற்குப் பொருள்—அமைச்சர்கள் மீது தனிப்பட்ட முறையில் ஏதோ கோபம் கொண்டிருக்கிறோம்என்பதல்ல. அரசாங்கத்தின் தமிழின விரோதக் கொள்கைகளை எதிர்க்கிறோம் என்பதை எடுத்துக் காட்டவே கறுப்புக்கொடி காட்டுகிறோம்.

நாம் கறுப்புக்கொடியைக் காட்டும் போது—நல்ல துணிகளாகக் காட்டவில்லை யென்றும் கிழிந்த பழைய சீலைகளையே காட்டுவதாகவும் அரசாங்கக் கட்சியினரும், தினபதி போன்ற பத்திரிகைக் காரர்களும் குறைப்படுவதாக அறிந்தேன். இதற்கு காரணமே இந்த அரசாங்கம்தான். இந்த அரசாங்கத்தில் கறுப்புத் துணிக்குக்கூட பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது!

சுகாதார அமைச்சர்: உங்கள் தலைவருக்கு கூட மாதகலில் கறுப்புக் கொடி காட்டப்பட்டதே!

தர்மலிங்கம்: அது முழுப் பொய்யான செய்தி. அச்செய்தி ஏற்கெனவே தினகரன் பத்திரிகையில் கொழும்பு நிருபரால் தினகரனில் பிரசுரிக்கப்பட்டு, அதன் பின் எங்கள் தலைவராலும் சம்பந்தப்பட்ட மாதகல் விழாவுக்கு தலைமை வகித்தவராலும் மறுக்கப்பட்டும் விட்டது. இதன் பின் பத்து நாட்கள் கழித்து ‘ஒப்சேவர்’ பத்திரிகையில் முன்பக்கத்தில் அச்செய்தி திடீரென இடம் பெற்றிருக்கக் காணப்பட்டது. ‘ஒப்சேவருக்கு’ அச்செய்தி தபாலமைச்சு மூலமாகவே போனதாக எனக்கு ஆதாரம் கிடைத்துள்ளது. தபாலமைச்சு செய்திகளை ஏரிக்கரை ஸ்தாபனத்துக்கு சேர்த்துக்கொடுக்கும் திரு. முத்துக்குமாரனே என்பவரே அச்செய்தியையும் ‘ஒப்சேவருக்கும்’ கொடுத்திருக்கிறார் என்ற உண்மை அம்பலமாகி விட்டது!

குமாரசூரியர்:- நான் அதை மறுக்கிறேன்!

தர்மலிங்கம்:- எதை மறுக்கிறீர்கள்? ‘முத்துக்குமாரனே’ எனும் நிருபர்தான் அச்செய்தியை கொடுத்தாரென்பதை உங்களால் மறுக்க முடியாது. இந்த நிருபர் தான் தபாலமைச்சு சம்பந்தப்பட்ட செய்திகளையும் ஏரிக்கரை ஏட்டுக்கு திரட்டித்தருபவர்!

—பேரவையில் உடுவில் பா.உ.

## சிங்கள மொழிப் பாடசாலைகளை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யமைச்சர் ஏற்றுக்கொண்டு, மேற்கண்ட மூன்று பாடசாலைகளும் தமிழ் மொழிப் பாடசாலைகளாகவே தொடர்ந்து இயங்கவேண்டும் என்றும் சிங்கள மொழிப்பாடசாலைகளாக அவற்றை மாற்றக் கூடாதென்றும் கட்டளையொன்றை அனுப்பி வைத்தார். இக்கட்டளையின் பிரதியை நான் நேரடியாக யாழ்ப்பாணம் கல்விக் கந்தோரில் பார்த்திருக்கிறேன்.

இவ்வளவு விஷயங்களும் கல்வியமைச்சின் ‘பைலில்’ இருக்கின்றன. இவற்றையெல்லாம் படித்துப் பாராமலோ அல்லது வேண்டுமென்று மறைத்துவிட்டோ, ‘டெயிலி நியூஸ்’ பத்திரிகையை நம்பிக்கொண்டு கல்வியமைச்சு பொய்யான அறிக்கையை விடத்துணிந்தது ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் வந்ததும், சிங்களமொழியறியாத—தமிழ் பிள்ளைகள் மட்டுமே படிக்கும் புத்தூர் பாடசாலைக்கு 4 சிங்கள ஆசிரியர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். 2 தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மாணவர்களுக்கு சிங்களம் விளங்காது — சிங்கள ஆசிரியர்களுக்கு தமிழ் தெரியாது. 2 தமிழ் ஆசிரியர்களும் 4 சிங்கள ஆசிரியர்களின் மொழி பெயர்ப்பாளர்களாக கடமையாற்றி வந்தனர். இதனால் பிள்ளைகளின் படிப்பு பாழ்பட்டது.

இதனால் இப்போது புதிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 5ம் வகுப்புத் தொடக்கம் 8ம் வகுப்பு வரையும் போதனா மொழி தமிழாகவேயிருக்கும்; புதிதாக சேரும் பிள்ளைகள் சிங்கள மொழி மூலமே சேரவேண்டும் என்பதே அந்தப் புதிய மாற்றம். அதாவது அப்பாடசாலையை சிங்கள மொழிப் பாடசாலையாக மாற்ற நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்ப்பிள்ளைகளின் போதனாமொழியாக சிங்களத்தை நுழைக்க[illegible] செய்யப்பட்டுள்ளது.

இந்தஇக்கட்டானநிலையை எதிர்த்து நிற்கத் தமிழினம் தயாராகிவிட்டது என்பதை இச்சபைக்கும் கல்வியமைச்சருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.”

—இவ்வாறு கதிரவேற்பிள்ளை பேசினார்.

### பதியுதீன் நழுவினார்

புத்தூர் பாடசாலை போதனாமொழி விஷயமாக தமிழரசுக்கட்சியினரைத் தாக்கும் நோக்குடன், அனேகமாக சபைக்கு வராமல் இருக்கும் கல்வியமைச்சர், அன்றைய தினம் வந்திருந்ததாக தாம் அறிந்ததாகவும், திரு. கதிரவேற்பிள்ளையின் புள்ளி விபரத்துடன் கூடிய பதிலைக் கேட்டதும் பதிலளிக்கமுடியாது, வெலவெலத்துப் போய், பின்னர் பதிலளிப்பதாக கூறி சபையிலிருந்து அமைச்சர் மெல்ல நழுவி விட்டதாகவும் உடுவில் பா. உ. திரு. [illegible] வித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனமொழியை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று 1965க்கு முன்பிருந்த அரசாங்கம் தீர்மானித்திருந்தது. முஸ்லிம்களுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் ஏதாவது அவர்கள் விரும்புகிற ஒரு மொழியில் போதிக்க முடிவுசெய்யப்பட்டிருந்தது.

### போதனமொழி தாய்மொழியே

தேசிய அரசாங்கம் நிறுவப்பட்டபின்னர், கல்வியமைச்சராக இருந்த திரு. இரியகொல்லே, கல்விச் சீரமைப்புக்காக பல திட்டங்களைச் சமர்ப்பித்து, அவற்றை ஒரு நகல் மசோதாவாக உருவாக்கினர். இத்திட்டம் இறுதியாக தேசிய அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுவினால் ஆராயப்பட்டது. இந்தப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் அமைச்சரினால் பிரேரிக்கப்பட்ட பிரச்சினைக்குரிய ஒரு திட்டம், போதனமொழி சிங்களமா தமிழா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை பெற்றோரிடம் விடவேண்டும் என்பதாகும்.

தேசிய அரசாங்கத்தில அங்கம் வகித்த அனைத்துத் தமிழ்க் கட்சிகளும்—தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் திட்டவட்டமாகவும், தீர்க்கமாகவும் இந்த யோசனையை எதிர்த்தன. இதையொட்டி இரவிரவாக சூடான—கடுமையான விவாதம் நடந்தது. திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். தொண்டமான் ஆகியோரும், எனது கட்சியைச் சேர்ந்தவர்களும், போதனமொழி தாய்மொழியாகவே இருக்கவேண்டுமென்றும், அதை தெரிவு செய்யும் உரிமையை பெற்றோரிடம் விடக்கூடாதென்றும் கடுமையாக வாதிட்டார்கள்.

இப்பிரச்சினையில் சமரசம் ஏதும் ஏற்படாத காரணத்தினால், அமைச்சரின் யோசனை தொடரப்படவில்லை. அமைச்சரின் கல்விச் சீரமைப்புத் திட்டமும் அப்படியே கைவிடப்பட்டன.

போதனமொழியை தெரிவுசெய்யும் உரிமையை பெற்றோரிடம் கையளிக்கும் யோசனையை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொண்டதாக கூறப்படுவதை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன். அதே நேரத்தில், தேசிய அரசில் அங்கம் வகித்த தமிழ் உறுப்பினர்கள் அனைவரும், தமிழ் பிள்ளைகளின் கட்டாய போதனமொழியாகத் தாய்மொழியே இருக்கவேண்டும் என்பதிலும் பெற்றோர்களிடம் போதனமொழி உரிமையை கையளிக்கக்கூடாது என்பதிலும் உறுதியுடன் இருந்தார்கள்.

### கடிதங்களை வெளியிடுக

புத்தூரில் சிங்களமொழிப் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு நானோ எனது கட்சியைச்சேர்ந்த வேறு எவருமோ எந்த ஒரு கட்டத்திலும் அனுமதி அளித்ததில்லையென்று கூறிவைக்க விரும்புகிறேன். ஐந்து வயதுக்கும் 14வயதுக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள பிள்ளைகளுக்காக, இலங்கையில் எந்த ஒரு தனி நபரும் பாடசாலை நிறுவுவதை சட்டம் தடை செய்கின்றது.

அப்படியிருக்கும் போது பௌத்த சங்கமோ, அல்லது திருமதி மீகம எனபவரோ வடக்கில் ஒரு பாடசாலையை துவக்க எப்படி அனுமதிக்கப்பட்டார்கள் என்பது எனக்குப்புரியவில்லை. பௌத்தம் படிப்பிப்பதற்கு துவக்கப்பட்ட ஒரு பாடசாலைவை, அரசாங்கம் மறைமுகமாக கையேற்று, சிறுபான்மைத் தமிழர்களுக்கும், ஏனைய தமிழர்களுக்குமிடையே மோதலைத் தோற்றுவிக்க திட்டமிடுவதாகவே நான் சந்தேகிக்கிறேன்.

எனது ஞாபகப்படி, தமிழரசுக்கட்சி தேசிய அரசிலிருந்து வெளியேறிய பின்னர்தான் இந்தப்பாடசாலைகளை யூ. என். பி. அரசுபொறுப்பேற்றது.

இன்றைய சட்டத்தின் படி, தமிழ் மொழிப்பாடசாலை யொன்றை சிங்கள மொழிப்பாடசாலையாக அப்படியே மாற்றுவதற்கு அரசுக்கு அதிகாரம் கிடையாது. பெற்றோர் கோரினல் அப்படிகோரும் பெற்றோர்களுடைய பிள்ளைகளுக்கு மட்டுமே சிங்களத்தில் போதிக்கலாம் என்றே சட்டம்கூறுகிறது.

தனது பிள்ளை சிங்கள மொழி மூலம்தான் படிக்க வேண்டும் என்று எந்தப் பெற்றோராவது எழுதிக் கொடுத்திருந்தால், அந்தக் கடிதங்களை பகிரங்கமாக வெளியிடும்படி நான் கல்வியமைச்சுக்கு சவால் விடுகிறேன்.''

---

## சமரச

( 8-ம் பக்கத் தொடர்ச்சி )

தந்தை செல்வா மீண்டும் கடிதம் எழுதினர். நானும் அரசியல் நிர்ணய சபையில் வேண்டுகோள் விடுத்தேன்.

'எல்லா முயற்சிகளும் விழலுக்கிறைத்த நீர் போலாயின; எனவே சமாதான முயற்சிகளை முறியடித்ததற்கு பொறுப்பாளிகள் அரசாங்கம்தான்; நாங்கள் அல்ல!

—22-3-73 ல் தேசியப் பேரவையில் பேசியது.

---

## எத்தனை காலம் ஏமாற்றுவீர் இந் நாட்டிலே?

புதிய அரசியல் சட்டத்தின்படி, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகமொழியாக தமிழ் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பதாக ஆளும் கட்சியுடன் ஒட்டி உறவாடி அடிமை வேலை பார்க்கும் தியாகராசா, அருளம்பலம், மார்டின், வி. பொன்னம்பலம் போன்றோர் கூறித்திரிகின்றனர். ஆனல் நிலைமை என்னவென்பதை இவர்களின் குருநாதரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இதோ கூறுகிறார்:—

**அரசியல் சாசனத்தின் படி தமிழை வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கமொழி ஆக்கவில்லை. சிங்களம்தான் அரசாங்கமொழி.'**

—ஆதாரம் (24-3-73) தினகரன்!

தமிழ் மக்களை ஏமாற்றித்திரியும் தமிழ்த் துரோகிகளே! இதற்கு என்ன கூறுவீர்?

---

## குண்டர்களுடன் ......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டவையல்ல — கொழும்பில் மேற்படி பத்திரிகை அலுவலகத்திலேயே தயாரிக்கப் பட்டவை அவை. அச்செய்திகளை யெழுதியுள்ள 'உ' என்பவர் தினபதி அலுவலகத்தில் ஆசிரியர் பகுதியில் மிக உயர் மட்டத்தில் வேலை செய்யும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## மத்திய வங்கி செய்தித்திரட்டும் ஆண்டறிக்கையும்

பல்கலைக்கழகத்திலும், உயர்நிலை வகுப்புகளிலும் பயிலும் மாணவர்களும், பொருளியல் வல்லுனர்களும், வணிகத்துறையில் ஈடுபட்டிருப்போரும் பயன் பல பெறும் முறையில் இலங்கை மத்திய வங்கி, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதார நிதி விடயங்கள் பற்றிய விரிவான விபரங்கள் புள்ளி விபரங்கள் கருத்துரைகள் அடங்கிய மாதாந்த செய்தித் திரட்டையும், ஆண்டறிக்கையையும் வெளியிட்டு வருகிறது.

தமிழ் மாதாந்த செய்தித் திரட்டின் தனிப்படியின் விலை ரூபாய் 2/- ஆண்டுக் கட்டணம் ரூபாய் 20/- தமிழ் ஆண்டறிக்கையின் விலை ரூபாய் ஆண்டுக் கட்டணமாகிய ரூபாய் 20/-செலுத்துவோர்க்குத் தமிழ் ஆண்டறிக்கை இலவசமாகவழங்கப்படும்.

தமிழ்ப் பெருங்குடிமக்கள் இத்தமிழ் வெளியீடுகளுக்கு ஆதரவு அளித்து தமிழும் தமிழ் இனமும் ஈழத்தில் நிலைத்த நல்வாழ்வு பெறத் துணை புரிவார்களாக.

---

## அச்சுவேலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டிருந்தனர். அமைச்சரை அங்கு அழைத்துவருவதாக உடுப்பிட்டி சுதந்திரக் கட்சிக் கிளை அமைப்பாளர் திரு. கே. ரி. இராசசிங்கம், மேற்படி கோவில் முகாமையாளருக்கு உறுதியளித்திருந்தாராம். இந்த வரவேற்பு விழா 24.3.73 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவிருப்பதாக துண்டுப் பிரசுரமும் வெளியிடப்பட்டது.

இதையறிந்த அவ்வூரிலுள்ள தமிழர் கூட்டணி ஆதரவாளர்கள் கொதித்தெழுந்தனர். அமைச்சர் வந்தால், அமைச்சருக்கு எதிராக வரவேற்பு விழாவில் தாம் கறுப்புக்கொடி பிடிக்கப்போவதாக அவர்கள் கூட்ட நிர்வாகிகளுக்கும் உடுப்பிட்டி சுதந்திரக் கட்சி அமைப்பாளர் இராசசிங்கத்துக்கும் பொலிசாருக்கும் அறிவித்ததுடன், அமைச்சருக்கு எதிரான சுலோகங்களை தெருவெங்கும் ஒட்டினர்.

இதனால், கதிகலங்கிய அமைப்பாளர், கடைசி நேரத்தில் எதிர்ப்புக்கு மத்தியில்வர அமைச்சர் விரும்பவில்லையென்ற செய்தியை சோகத்துடன் அங்குவந்து தெரிவித்தாராம். வாடிய மாலையோடும், வாடிய முகங்களோடும் சோர்ந்து போய் உட்கார்ந்தார்கள் வரவேற்பு விழா நடத்த விருந்த சுயநலமிகள்!

அங்கு வந்துசேர்ந்த அரசாங்கக் கட்சியின் அடிமை பா. உ. ஒருவருக்கு கறுப்புக் கொடி வரவேற்பு கிடைத்ததாக தெரிகிறது.

---

## வரப்பெற்றோம்

### 'வைத்திய தீபம்'

டாக்டர் ரி. டி. மதுரநாயகம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்துள்ள 'வைத்திய தீபம்' முதல் இதழ் கிடைக்கப் பெற்றோம். தமிழில் வைத்திய சஞ்சிகைகள் இல்லாத குறையை 'வைத்திய தீபம்' ஓரளவு நீக்கியுள்ளது.

முத்தான ஆறு வைத்தியக் கட்டுரைகளும், பொதுமக்களுக்கு உபயோகமான வைத்திய ஆலோசனை சம்பந்தப்பட்ட பல விடயங்களும் இதழை அணி செய்கின்றன.

தனிப் பிரதி விலை-சதம் 50. கிடைக்குமிடம் ஞானசுந்தர வைத்தியசாலை, 187, செட்டியார் தெரு, கொழும்பு 11.

---

# தமிழர் தந்தையின் பிறந்தநாள் விழா!

ஈழத் தமிழினத்தின் தானைத் தலைவர் பெரியவர் செல்வா அவர்களின் 75வது பிறந்த நாளன்று (31.3.73) தமிழ் பகுதியிலுள்ள சைவ ஆலயங்களிலும், கிறிஸ்தவ ஆலயங்களிலும் தந்தையின் பெயரால் விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் நடைபெறுகின்றன.

மார்ச்சு 31ம் நாள் பிரமாண்டமாக நடைபெற விருந்த தந்தையின் பிறந்த நாள் விழாவும், பிறந்தநாள் சிறப்பு மலர் வெளியீடும், இவற்றுக்கு பொறுப்பாக இருந்த விழாச் செயலாளர் மாவை—சேனாதிராசாவும் வேறு பல இளைஞர்களும் திடீரென கைதுசெய்யப் பட்டதால் குறித்த திகதியில் திட்டமிட்டபடி நடைபெற முடியாமற் போய் விட்டதென்றும், மலர்வெளியீட்டு விழா பிறிதொரு திகதியில் நடைபெறுமென்றும் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

31ம் திகதி காலை தமிழர் கூட்டணித் தலைவர்கள் தந்தைக்கு மலர் மாலை சூடி தமிழினத்தின் வாழ்த்துக்களைக் காணிக்கையாக்குவர்.

கந்தரோடை வட்டாக்கை அம்மன் கோவில், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆகியவற்றிலும் விசேட பிரார்த்தனைகளும் பூசையும் நடைபெறுகின்றன.

---

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**303-வது நாள்**

---

## தமிழர் கூட்டணியின் ஆதிக்கத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் கலைப்பு!

தமிழரசுக் கட்சியினதும், தமிழர் கூட்டணியினதும் உறுப்பினர்கள், ஆதரவாளர்களின் நிர்வாகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை கலைத்து அவைகளை ஆணையாளரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும்வேலையில் உள்ளூராட்சி அமைச்சு வேகமுடன் செயலாற்றி வருகிறது.

அதே வேளையில் அரசாங்கத்துக்கு ஆதரவான உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக தாம் எத்தனை புகார்கள் செய்தாலும் குற்றம் சுமத்தினாலும் அவை குப்பைக் கூடைக்குள் சென்றுவிடுவதாக வரியிறுப்பாளர்கள் புகார் செய்கிறார்கள்.

அண்மையில் தமிழரசுக் கட்சி ஆதிக்கத்திலிருந்த திருகோணமலை நகர சபைகலைக்கப்பட்டு, சிங்கள ஆணையாளரின் கீழ் கொண்டுவரப் பட்டது தெரிந்ததே.

இப்போது, அதேபோல் கொக்குவில் கிராமசபையும் பண்டத்தரிப்பு கிராமசபையும் உள்ளூராட்சி அமைச்சரினால் கலைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய 'பழிவாங்கல்' நடவடிக்கைகளினால் தமிழர் கூட்டணிக்கு ஆதரவு அதிகரிக்குமே தவிர குறையாது என்று பொது மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

---

## நல்லூர் வடக்கு சனசமூக நிலையம் புதிய நிர்வாகிகள்

நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தின் புனரமைப்புக்கூட்டம் 25-2-1973 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நல்லூர் வடக்கு ஆடியபாத வீதியிலுள்ள 37ம் இலக்கக் கட்டிடத்தில் நல்லூர்கிராம சபைத்தலைவர் திரு. என். தில்லைவினயகம் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது.

தலைவர் உரையாற்றிய பின் நிர்வாகசபைத் தெரிவு நடைபெற்றது.

தலைவராக திரு. சி. விசுவலிங்கமும் உபதலைவராக திரு. இ. சிதம்பரநாதன் (2ம் வட்டார உறுப்பினர், ந. கி. சபை) அவர்களும் செயலாளராக திரு. செ. தெய்வேந்திரமும் உபசெயலாளராக திரு. பொ. செல்வராசாவும் பொருளாளராக திரு. கு. தனபாலசிங்கமும் உபபொருளாளராக திரு. பெர். தியாகராசாவும் ஏகமனதாக தெரிவு செய்யப் பட்டனர்.

இறுதியாக ஒன்பது பேர் கொண்ட ஓர் நிர்வாகசபை நிறுவப்பட்டது. திருவாளர்கள் ந. சத்தியமூர்த்தி ஆ. கார்த்திகேசு பா. சந்திரசேகரம் க. இராசதுரை நா. இராசரத்தினம் த. ஜெயபாலசிங்கம் க. சுந்தரலிங்கம் இ. காசிநாதன் வ. சிவச்செல்வன் ஆகியோர் உறுப்பினர்களாக தெரிவுசெய்யப் பட்டனர்.

இறுதியாக நல்லூர் கிராம சபையின் உபதலைவர் மு. பழனியப்பன், மக்கள் சனசமூக நிலையத் தலைவர் திரு. க. சண்முகராசா இலங்கை வங்கி வவுனியாக்கிளையைச் சேர்ந்த திரு. ந. சோமசுந்தரம் ஆகியோரின் ஆசியுரையுடனும் நல்லூர்க்கிராம சபைத்தலைவரின் நன்றியுரையுடனும் கூட்டம் இனிதே நிறைவேறியது.

---


மில்க்வைற் சோப் விற்பனையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

மில்க்வைற் சோப் பாவனையாளர்கள் எமது பரிசுத் திட்டத்தில் அதிக ஆர்வத்துடன் பங்கு பற்றிக் கொண்டிருப்பதால், தயவுசெய்து உங்கள் வாடிக்கையாளர்களுக்கு மில்க்வைற் நீல சோப் மில்க்வைற் பார்சோப் விற்பனை செய்யும் பொழுது அவற்றின் மேலுறைகளுடன் விற்பனை செய்யுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த; பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சமரச முயற்சிகள் அனைத்தையும் தவிடுபொடியாக்கியவர்கள் யார்?'

## தேசிய பேரவையில் தர்மலிங்கம் விளக்கம்

சிறீலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரத்துக்கு வரும் போதெல்லாம், தமிழரசுக்கட்சி அதை எதிர்க்கிறதாகச்சிலர் குறைப்படுகிறார்கள். நான் அவர்களை நோக்கி எதிர்க் கேள்வியொன்றைப் போடுகிறேன்! சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் ஒவ்வொரு தடவையும் தமிழர்களுக்கு விரோதமான சட்டங்களையே கொண்டு வருகிறார்களே அது ஏன் என்பதே எனது கேள்வியாகும்!

1956ம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றினார்கள். கைப்பற்றியவுடன், தமிழ்மொழி இந்நாட்டில் அதுவரை காலமும் அனுபவித்து வந்த சம அந்தஸ்தை பறிக்கும் நோக்குடன் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். சிங்களம் மட்டும் சட்டம் தமிழினத்தின் மொழியுரிமையைப்பறித்து இரண்டாந்தர நிலைக்கு தாழ்த்திற்று.

1960ம் ஆண்டு, தமிழரசுக்கட்சியின் ஆதரவுடன் யூ. என். பி. ஆட்சியை வீழ்த்தி, அதே தமிழரசுக்கட்சியின் ஆதரவுடன் ஜூலைப்பொதுத் தேர்தலில் மிகப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை கைப்பற்றியது சுதந்திரக்கட்சி. ஆட்சியை கைப்பற்றியவுடன், தமிழரசுக் கட்சியுடன் உள்ள உறவை முறித்தெறியும் கெட்ட நோக்கமுள்ள ஒரு சிலரின் தூண்டுதலால், 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அவசரமவசரமாக இரவும்பகலுமாக விவாதித்து நீதிமன்றங்களில் சிங்களத்தை மட்டும் நிர்வாக மொழியாக்கும் சட்டத்தை நிறைவேற்றினீர்கள்.

1970ம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன், தமிழ் மக்களின் உரிமைகளுக்கு இடந்தராது அவர்களை அடிமை நிலைக்கு தாழ்த்துகின்ற ஒரு அரசியல் சட்டத்தை — தமிழ் மக்களின் சம்மதமின்றி நிறைவேற்றி இன்று அந்தச் சட்டத்தினால் அவர்களை ஆள முயற்சிக்கின்றீர்கள்.

இப்படி அதிகாரத்துக்கு வரும் ஒவ்வொரு தடவையும் தமிழினத்துக்கு எதிரான சட்டங்களை கொண்டுவரும் சுதந்திரக்கட்சி அரசாங்கத்தை நாங்கள் எதிர்க்காமல் எப்படி ஆதரிக்க முடியும்?

தமிழ்ப்பகுதிக்கு செல்லும் அமைச்சர்கள் கூறுகிறார்கள் கறுப்புக்கொடியால் பிரச்சினைகள் தீராது; நல்லெண்ணத்தாலும பேச்சுவார்த்தையாலும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்று. அடிக்கடி அங்கு சென்றிருந்த நீதியமைச்சரும் இதையே கூறினார். நான் கேட்கிறேன்— சமாதான முயற்சிகளுக்கு யார் தடையாக இருந்தார்கள் என்று! சமாதானமாக பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நாம் எடுத்த நடவடிக்கைகளை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1960ம் ஆண்டு டிசம்பர் மாதம் நீதிமன்றமொழிச் சட்டம் நிறைவேற்றப் பட்டாலும் — அந்தச் சட்டம் 1970ம் ஆண்டுவரை ஒரு நீதிமன்றத்திலாவது — சில கிராமக்கோடுகளைத் தவிர — அமுல்படுத்தப்படவில்லை. முதல் தடவையாக 1970ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தான் கம்பகா நீதிமன்றத்தில் சிங்களம் நீதிமன்ற மொழியாக்கப்பட்டது.

இதையடுத்து, 13.8.70ல் எங்கள் தலைவர் தந்தை செல்வாவும் அப்போது எங்கள் கட்சியிலிருந்த யாழ்ப்பாண பிரதிநிதி மார்ட்டினும், நானும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவை அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து இதுபற்றிப்பேசினோம் 1960ம் ஆண்டின் நீதிமன்ற மொழிச்சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் மேலும் கால தாமதம் செய்யக்கூடாதென்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை நீதிமன்றமொழியாக்க வேண்டுமென்றும் எங்கள் தலைவர் தந்தை செல்வா அமைச்சர் கொல்வினிடம் எடுத்துரைத்தார். இந்தப்பிரச்சினையை, பிரதமரிடம் கொண்டுசெல்வதாக டாக்டர் கொல்வின் அப்போது உறுதியளித்தார். என்றாலும் பின்னர் எதுவும் நடக்கவில்லை.

இதையடுத்து, புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டது. அரசியல் நிர்ணயசபையைக்கூட்டியது. அந்த நேரத்திலும், தமிழ் மக்களின் மொழி உரிமை சம்பந்தப்பட்டபிரச்சினைகளை அரசியல் நிர்ணய சபையின் வாக்குப்பலத்தால் தீர்மானிக்க முடியும் என்று நாங்கள் கருதாமல், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவே முயற்சியெடுத்தோம்.

எவ்வளவோ முயற்சியெடுத்து, 6-3-71ல் நாங்கள் பிரதமரைச் சந்தித்தோம். எங்களால் முன்வைக்கப்படும மொழியுரிமை சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை, அரசியல் நிர்ணயசபையின் வாக்குப்பலத்தினால் தீர்மானிப்பதற்கு நாம் விடமுடியாதென்றும், அதன் முன்னர், பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இதற்கு ஓர் தீர்வுகாணப்படவேண்டும் என்றும் பிரதமரிடம் வலியுறுத்தினோம்.

போதனாமொழி, நீதிமன்ற மொழி, நிர்வாகமொழி, கடிதத்தொடர்பு மொழி, போன்ற விடயங்களில் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகாவின் கருத்துக்கள் என்னவாக இருந்தன என்பதை பாராளுமன்ற நடவடிக்கைப் புத்தகங்களிலிருந்து மேற்கோள் காட்டி எங்கள் தலைவர் செல்வா பிரதமரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அப்போது பிரதமர், இவற்றுக்கு ஒரு சமாதானத் தீர்வு காண முடியும் என்று செல்வாவுக்கும் ஏனையோருக்கும் நம்பிக்கை தெரிவித்ததுடன் இப்பிரச்சினையை மந்திரி சபையின் முடிவுக்கு தாம் சமர்ப்பிப்பதாக கூறியிருந்தார்.

இதன் பின்னரும் எதுவும் நடக்கவில்லை. தந்தைசெல்வாவும் மற்றையோரும் வேறு பல அமைச்சர்களையும் இது சம்பந்தமாக மீண்டும் சந்தித்துப்பேசினார்கள். அமைச்சர்கள் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா ஆகியோரையும் சந்தித்து, மொழிப்பிரச்சினையில் சமாதானத் தீர்வு காணப்படவேண்டிய அவசியத்தை நயமாக எடுத்துரைத்தார்கள்.

சந்தித்த எவராவது 'முடியாது' என்று திட்ட வட்டமாக மறுக்கவில்லை. அதே நேரத்தில் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இறுதியாக அரசியல் நிர்ணய சபையில் மொழி சம்பந்தமான விவாதம் நடைபெற்ற நேரத்தில், இறுதியாக எங்கள் தலைவர் பிரதமருக்கு, 22-5-71ம் திகதி ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில், தாம் முன்வைத்த கோரிக்கைகள் பற்றி இறுதி முடிவை அறிவிக்கும் படியும், தமிழ் மக்களுக்கு அதை அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

இதற்கும் பிரதமர் மௌனம் சாதிக்கவே, தமிழரசுக்கட்சிப பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளிநடப்பு செய்ய வேண்டிய சூழ்நிலை தோன்றிற்று.

தமிழரசுக்கட்சி, கட்சியடிப்படையில் சமாதானத் தீர்வு காண எடுத்த முயற்சிகளை இது வரை விளக்கினேன்.

'அதே நேரத்தில் கட்சி வேறுபாடற்ற முறையில் தமிழ் மக்களின் கட்சிகள் அனைத்தும் ஒன்று கூடி குறைந்த பட்சக்கோரிக்கைகளாக 9 அம்சக்கோரிக்கைகளை நிறைவேற்றி, அக் கோரிக்கைகள் அரசியல் சட்டத்திலிடம் பெற வேண்டுமென அரசாங்கத்தைக்கோரின. வல்வெட்டித்துறையில் நடைபெற்ற இந்த அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் மாநாட்டின் சார்பில் வழக்கறிஞர் திரு. வி. நாகராசா, தமிழ்க்கட்சிகளின் கோரிக்கைகள் குறித்துப்பேச்சுவார்த்தை நடத்த ஒரு திகதி தரும்படி கேட்டு பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்துக்கு பிரதமர் நாகராசாவுக்கு அனுப்பிய பதிலில், உங்கள் கோரிக்கைகள் குறித்து அமைச்சர் மைத்திரிபால சேனநாயகாவை சந்தித்துப் பேசுங்கள் என்று குறிப்பிட்டிருந்தார். அமைச்சர் மைத்திரிபாலசேனநாயகாவும் இதை உறுதிப்படுத்தி நாகராசாவுக்கு கடிதம் எழுதினார். ஆனால் தொடர்ந்து பேச்சுவார்த்தை எதற்கும் திரு. நாகராசாவுக்கு அமைச்சரினால் அழைப்பு விடுக்கப்படவில்லை.

'தமிழரசுக்கட்சியும், தமிழர்கள் கூட்டணியினரும் மொழிப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுத்த முயற்சிகளுக்கு எவ்வித முற்றும் கிடைக்காததினாலும், அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டதாலும், அரசியல் நிர்ணய சபையில் மொழி சம்பந்தமான விதிகளை விவாதித்து முடிவு எடுப்பதை ஒத்தி வைத்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கையெடுக்கும் படி பிரதமருக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

### மார்டினுக்கு நவம் 'சூடு'!

''மார்ட்டின்:— திர்க்கமாக சிந்தித்து முடிவெடுக்காமல் பல்வேறு விஷயங்களில் தமிழரசுக்கட்சி தவறுவிட்டிருக்கிறது. இப்படியான அவசர முடிவுகள் தமிழ் மக்களுக்கு நன்மையைவிட தீமையையே விளைவித்திருக்கின்றன.

திரு. வி. என். நவரத்தினம்:— ''உங்களை எமது அபேட்சகராக நிறுத்தியதுதான் நாம் செய்த பெருந் தவறாகும்''

திரு. மார்ட்டின்:— என்னை இருமுறை உங்கள் அபேட்சகராக நிறுத்தியிருக்கிறீர்கள்.

திரு. வி. என். நவரத்தினம்:— எம்மால்தான் நீங்கள் இச்சபைக்கு வர முடிந்தது.

திரு. மார்ட்டின்:— நான் முன்வந்ததால்தான் யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக்கட்சி வெற்றி பெற முடிந்தது. 25 ஆண்டுகளுக்கு பின் இந்த வெற்றி கிடைத்தது. நான் மீண்டும் போட்டியிடத்தயார்.

திரு. நவரத்தினம்:— உங்கள் அரசியல் வாழ்க்கையை நாம் அறிவோம்.

திரு. மார்ட்டின்:— உங்கள் அரசியல்பற்றி ஒருபத்து நிமிஷம் நான் கூறினால் நீங்கள் இச்சபையைவிட்டே ஓடிவிடுவீர்கள்.

திரு. நவரத்தினம்:— 'உங்களுக்கு சவால் விடுக்கிறேன். முடிந்தால் கூறுங்கள் பார்க்கலாம்.

— தேசிய பேரவை நிகழ்ச்சி (22. 3. 73)

# 'கண்துடைப்புச் சட்டங்களை நிறைவேற்றுவதால் காங்கேசன்துறையில் அரசு வெற்றிபெற முடியாது!'

## நீதிமன்றமொழிச் சட்டம்பற்றி எஸ். எம். செல்லச்சாமிகருத்து

"மூல அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கு சம உரிமை வழங்கப்படவில்லை என்பதனாலேயே காங்கேசன்துறை உறுப்பினராக இருந்து வந்த தமிழர் கூட்டணித் தலைவர் திரு. செல்வநாயகம் தனது பதவியைத் துறந்தார். தமிழர்கூட்டணி இந்த அடிப்படையை முன்வைத்தே அரசை எதிர்த்து அங்கு போட்டியிடவிருக்கிறது. இந்நிலையில் தமிழ் மக்களுடைய அபிலாசையை அரசு நிறைவேற்றிவிட்டதாக எந்தவொரு தமிழ் பேசும் மகனும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இத்தகைய வெறும் கண்துடைப்பால் மக்கள் மயங்கிவிடப் போவதுமில்லை."

—இவ்வாறு நீதிமன்ற மொழி சிறப்பு ஏற்பாடுகள் மசோதா குறித்து கருத்து வெளியிட்டுள்ள [illegible] தொழிலாளர் [illegible] திரு. எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

திரு. செல்லச்சாமிமேலும் கூறியுள்ளதாவது:—

அரசியல் நிர்ணய சபையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் முறையில் ஒரு மசோதாவை நிறைவேற்றி விடுவதால் மட்டும் தமிழ் மக்களை திருப்தியடையச் செய்துவிட முடியாது. நீதிமன்ற மொழி மசோதா, மூல அரசியல் அமைப்பில் இல்லாமல் ஒரு மசோதா வாயிலாகச் சலுகையளிக்க முயல்வது மூலம் தமிழ் மக்களின் சம அந்தஸ்துக் கோரிக்கை பூர்த்தி செய்யப்பட்டதாக ஆகாது.

'இந்நாட்டில் வாழும் மக்கள் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி எல்லா மக்களும் கூடிய சம தன்னுரிமைக ஆட்சியுடைய ஒரு நாட்டில் வாழுகின்றோம் என்ற எண்ணம் எல்லோருக்குமே இல்லையேல் தான், நாடு முன்னேற முடியும். ஒரு சமூகத்திற்கு [illegible] மறுக்கப்படுமானால் அது மனிதகுல உரிமைக்கே மாறானதாகும்.

இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மொழி உரிமை தமிழ் பேசும் மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். அடிப்படை அரசியல் அமைப்பில் வழங்கப்படாத ஒரு உரிமையை மசோதா மூலம் பெரும் பான்மை இனம் அளிக்கும் சலுகையாக ஆக்க முற்படுவது தமிழ் பேசும் மக்களை மாற்றாந்தாய் மனோபாவத்தோடு கணிப்பதாகவே அமையுமன்றி வேறல்ல.

ஆயிரக்கணக்கான தோட்டத்தொழிலாளர்கள் இன்று தொழில் நீதி மன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்து மாதக்கணக்காக, வருடக் கணக்காக காத்திருந்து வழக்காடிக்கொண்டிருக்கின்றனர். மாவட்ட நீதிமன்றங்களிலும் இன்னும் பிற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வழக்காடிக் கொண்டிருக்கின்றனர். தமிழில் பெற்ற போதனா மொழியை விட வேறு மொழி கற்க வசதியற்ற அந்தப்பாட்டாளி மக்கள் எந்த மொழியில் தமது வழக்கை எடுத்துரைப்பார்கள்? அரசாங்கத்துடனே, அரசாங்க இலாகாக்களுடனே தமிழில் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ளவும் முடியவில்லை.

இந்நாட்டில் தமிழ்பேசும் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மட்டிலுமன்றி மலையகத்திலும் எண்ணிக்கையில் குறைவில்லாமல் வாழுகின்றனர் என்ற உண்மையின் அடிப்படையில் மூல அரசியல் அமைப்பிலேயே தமிழுக்கு உரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். வேறு எந்தவொரு சலுகையளிக்கும் மசோதாவும் தமிழ்மக்களைத் திருப்திப்படுத்தப் போவதில்லை என்பதே இ. தொ. கா. வின் நிலை.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கதை




“கண்ணன்”

## அத்தியாயம் (3)

எங்கே அதிக அன்புவைத்திருக்கின்றோமோ அங்கே அறிவுக்கு உரிய இடத்தைக் கொடுக்க மறந்துவிடுகின்றோம். எதிலும் அளவோடும் நிதானத்துடனும் நடந்து கொண்டால் அறிவும் விழித்துக்கொண்டே இருக்கும். மகளிடம் அதிக அன்புவைத்திருந்த சோமசுந்தரம் அவள் கிடந்த நிலையைப் பார்த்துப் பயந்துவிட்டார். அவளோ தந்தையை அவ்விடத்தில் எதிர்பார்க்காததினால் அதுவரை தான் கனவு கண்டிருக்கின்றோம் என்பதை எண்ணிப் பயந்தவளாய்த் தடுமாறினாள்.

'என்னம்மா உடம்புக்கு? கல்லூரியால் வந்தது முதல் படுக்கையிலேயே கிடக்கின்றாயே.' என்றார் சோமசுந்தரம்.

'ஒன்றுமில்லை அப்பா. சும்மா தலைவலி. ஒரு சிறு தூக்கம் போட்டேன். இப்போ எல்லாம் சரியப்பா' என்று சமாளித்துக்கொண்டே எழுந்து தந்தையுடன் சென்றாள் ராதாலட்சுமி.

பருவக் கோளாறு என்று பரவலாகச் சொல்லப்பட்டாலும், அன்பும் ஆதரவும் காட்டும் பெற்றோரிடம் உண்மையை மறைத்து நடக்கும் அளவுக்கு பருவத்தின் தொல்லை இளம் உள்ளங்களை ஆட்டிப்படைக்கின்றதே என்று எண்ணியவளாகச் சாப்பிட உட்கார்ந்தாள் ராதாலட்சுமி.

'லட்சு! சாப்பிட மனமில்லாட்டி பாலாவது குடியேன்.' என்றாள் அக்கா கவிதா.

அக்கா தங்கைகளிடம் ஒற்றுமையிருந்தாலும், சிலவிடயங்களில் அக்கா கண்டிப்புடன் நடந்துகொள்வாள். ஆனாலும் அவளைச் செல்லமாகவும், அதே சமயம் நாகரீகமாகவும் 'லட்சு' என்று வாஞ்சையுடன் அழைப்பாள் கவிதாலட்சுமி.

மூத்த பெண்களைப் பெரும் இடங்களில் கட்டிக்கொடுத்திருந்தார் சோமசுந்தரம். அதுபோல் இளைய மகளையும் நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்கவேண்டும் என்பது அவர் ஆசை. ஆனால் அவள் மனம் தடம் புரண்டு ஓடிவிட்டதே! எவ்வளவுக்குக் கட்டுப்பாட்டுடன் இருந்தாளோ அவ்வளவுக்கு அவள் மனதில் குடிகொண்ட நினைவும் தீவிரமடைந்துகொண்டிருந்தது. ஆனால் அந்தஸ்து, கௌரவம் என்ற சில அர்த்தமற்ற அகம்பாவத்தினால் தன் மனதில் தோன்றியவற்றை வெளிக்காட்டாது உள்ளடக்கிக்கொண்டாள்.

யாழ் நகரிலிருந்து மேற்கே செல்லும் பஸ் வண்டியில் பட்டதாரி மாணவர்களின் கோஷ்டியும் கலந்துசென்றது. இருமருங்கும் பச்சைப் பசேல் என்ற வயல் வெளியின் நடுவே மலைப்பாம்பு போன்று நீண்டு தெரிந்த தார் ரோட்டில் வேகமாகச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் இரு உள்ளங்களின் மனோவேகமும் அதைவிட வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள சந்தியில் பஸ் நின்றதும் மாணவ மாணவியர் இறங்கினர். அனேகமாக கல்லூரி வளவிலுள்ள இரு பாதைகளாலும் மாணவர்கள் செல்வது வழக்கமாயினும், பஸ்ஸில் வரும் மாணவிகள் ஒரு பாதையாலும், மாணவர்கள் மறு பாதையாலும் செல்வார்கள். அன்றும் வழக்கம்போல வாசுதேவன் தான் செல்லும் பாதையில் நடக்க ஆரம்பித்தபொழுது, 'மிஸ்டர் வாசு' என்று அழைத்தாள் ராதாலட்சுமி. அவள் குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்தான் வாசுதேவன்.

'நானும் உங்களோடு வருகின்றேன். ஆட்சேபனையில்லையே!' என்றாள் ராதாலட்சுமி.

'நதிங் மிஸ்' என்று கூறிச் சிரித்தான்.

அவனாகவே ஏதாவது ஆரம்பிப்பான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவன் தன்னைவிட மிக அழுத்தமான நெஞ்சுடையவன் என்பதை உணர்ந்துகொண்டதும், 'என்னுடைய கடிதம் பார்த்தீர்களா?' என்று அவளாகவே பேச்சை ஆரம்பித்தாள்.

'ஓ! பார்த்தேனே' என்றவன் சில நிமிட மௌனத்தின் பின்பு, 'உங்களை ஒன்று கேட்டால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?' என்று கேட்டான்.

'கோபமா? எதற்கு? எதுவானாலும் கேளுங்கள்.'

'எந்தப் பெண்களோடும் சேர்ந்து நான் நடிப்பதை விரும்பவில்லை என்று எழுதியிருந்தீர்களே என் நடிப்பு அவ்வளவு விரசமாக இருக்குமென்று எதிர்பார்க்கின்றீர்களா?'

'நோ...நோ... நீங்கள் தவறாக நினைத்து விட்டீர்கள் மிஸ்டர் வாசு.'

'நான் சும்மா முஸ்பாத்திக்குக் கூறினேன். ஒப்புக்கொண்டு விட்ட விடயத்தில் இனி மறுப்புக் கூறமுடியாது மிஸ். வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்கள் இப்படி அமைந்து விடுகின்றன; அதை விலக்கவும் முடியவில்லை. அதில ஈடுபாடு கொள்ளவும் முடிவதில்லை. இருந்தாலும் விரும்பியோ விரும்பாமலோ இதில் ஒப்புதல் அளித்து விட்டேன். இதனால் எனக்கு நல்ல பெயரோ கெட்ட பெயரோ ஏற்படுவதுபற்றி நான் அக்கறைப்படவில்லை. ஒரு கடமையைச் செய்யும் நினைவுடன்தான் ஈடுபடுகின்றேன்' என்றான்.

விரிவாகவும் விளக்கமாகவும் தன் கருத்தினைக் கூறி முடித்தான் வாசுதேவன். அவன் பேச்சுக்கு மறுவார்த்தையோ எதிர்க்கேள்வியோ கேட்கும் துணிவற்றவளாய் மௌனமாக அவன் அருகே நடந்து வந்து கொண்டிருந்தாள் ராதாலட்சுமி.

'மிஸ் ராதா! உங்கள் மனதில் ஏதாவது இருந்தால் கூறுங்கள். எதையும் மறைத்துப்பேசி எனக்குப் பழக்கமில்லை.'

'நான் அவசரப்பட்டு விட்டேன் மிஸ்டர் வாசு என்னை மன்னித்து விடுங்கள்.'

'இதில் மன்னிக்க என்ன இருக்கு? என் நன்மையை எண்ணியே நீங்கள் கூறினீர்கள். அதில் எனக்கு வருத்தமே கிடையாது.' என்று சிரித்தான்.

'மிஸ்டர் வாசு! உங்களைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. ஒரு சமயம் பெரிய சித்தாந்தவாதி போலப் பேசுகின்றீர்கள்... இன்னொரு சமயம் ஒன்றுமே தெரியாதவன் போன்று ஏதோவெல்லாம் கூறுகின்றீர்கள்.'

'அடடே! இவ்வளவு [illegible] லாம் கவனித்து [illegible] கின்றீர்களே. இடத்துக்குத் தகுந்த மாதிரி நாமும் நடந்துகொள்ளவேண்டும். மேதாவிகள் மத்தியில் நமது மேதாவித்தனத்தைக்காட்டாதுவிட்டால் எம்மை அவர்கள் முட்டாள்களாக்கி விடுவார்கள். சாதாரண மனிதர்கள் மத்தியில் அவர்களுடன் ஒத்துப்போகாமல் மேலதிகமாக எமது மேதாவித்தனத்தைக் காட்டினாலும் நாங்கள் முட்டாள்கள்தான். இல்லையா மிஸ் ராதா?'

'உண்மைதான் இதை எல்லோரும் உணர்ந்து நடந்தால் பிரச்சினையே கிடையாதே.'

'நீங்கள் உணர்ந்துகொண்டீர்களல்லவா அது போதும் எனக்கு.' என்று கூறிச் சிரித்தான் வாசுதேவன். அவளுக்கு அவன் அப்படிக் கூறியது பெருமையாக இருந்தது.

'எங்கே 'லைபிரரிக்கா' போகின்றீர்கள்?'

'ஆமாம் வேறு எங்கே போவது?'

'ஏன் இப்படி நின்று கதைப்போமே.'

'கதைப்பதில் தவறில்லை. ஆனால் பார்ப்பவர்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை நாம் தோற்றுவிக்கக் கூடாதல்லவா?'

'இப்ப மட்டும் என்னவாம்? பிரண்ட்ஸ் எல்லாம் என்னைக் கேலிபண்ணுறாங்கள்.'

'ஏன்?'

'பெண்களின் குணம் தெரியாதா உங்களுக்கு? ஒருத்தரை ஒருத்தருக்கு வைத்து சும்மா......' என்று கூறிச் சிரித்தாள்.

வாசு அந்த முகத்தினை ஊடுருவி நோக்கினான். அதில் கள்ளமில்லை, கபடமில்லை, தெளிந்த வானத்தில் பூரண சந்திரன் மிதப்பது போன்ற குளிர்மையான சிரிப்பு. தான் ஏதோ சொல்லக் கூடாத இரகசியத்தினைக் கூறிவிட்டது போன்று கலகலவெனச் சிரித்தாள். அவளுடைய அந்தச் சிரிப்பில் தானும் கலந்து கொண்டு சிரித்தான் வாசுதேவன்.

'ஏன் மிஸ் ராதா இப்படி நீங்கள் ஒருவர்க்கொருவர் கதைப்பதினால் மனஸ்தாபம் ஏற்படுவதில்லையா?.'

இதில் என்ன மனஸ்தாபம் விளையாட்டுக்காகத்தானே!'

'வாழ்க்கையோடு விளையாட நாம் நினைத்தால் எம்மோடு வாழ்க்கை சில சமயம் விளையாடிவிடும்.'

'அப்படி சீரியஸாக நீங்கள் நினைக்கின்றீர்களா?'

'விளையாட்டே வினையாவதுண்டு. அந்த வினையைச் செய்வது மதி. அந்த மதி செய்வதற்குத் தண்டனையளிப்பதுதான் விதி.'

'என்னவோ உங்கள் தத்துவம் எனக்குப் புரியவில்லை.

'புரிந்துகொள்ளாதளவில் [illegible] நீங்கள் எதற்கும் இடக்காகப் பேசுகின்றீர்கள்!'

'சரி நான் பேசாமலே விட்டுவிடுகின்றேன்' என்று கூறி அவன் சிரித்தபொழுது அவளும் சேர்ந்து சிரித்தாள்.

இப்படியே நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. தினமும், பஸ்ஸில் போய் வரும்பொழுது இருவரும் சேர்ந்து பழகுவது பலரது கண்களையும் உறுத்த ஆரம்பித்தது. கல்லூரியில் அவர்களைப் பற்றி ஒரு கதையே உருவாகிவிட்டது. முதலில் பெண்கள் பகுதியில் உருவாகி ஆண்களுக்கிடையிலும் பரவிவிட்டது. ஆனால் வாசுதேவனுக்கு இக்கதை எட்டவில்லை அவன் வழமைபோல அவளுடன் பொழுதைக் கழித்தான்.

தினசரி வீட்டுக்குத் தாமதித்து வரும் மகனை அன்று, 'ஏன்டா வாசு தினமும் தாமதித்துத் தான் வகுப்பு முடிகின்றதா?' என்று கேட்டாள் பாக்கியலட்சுமி.

'ஏன் அம்மா ஒரு நாளும் இல்லாமல் இன்று இப்படிக் கேட்கின்றீர்கள்?' என்று வாசு கேட்டான்.

'தினமும் நான்கு மணிக்கு முன்னர் வந்த நீ இப்பொழுது இரண்டு மூன்று வாரமாக பொழுது மறைந்த பின் வருகின்றாய். நீயாகச் சொல்வாய் என்று பார்த்தேன். சொல்லவில்லை. கேட்டேன் அவ்வளவுதான்.

'அம்மா கல்லூரியில் ஒரு நாடகம் போடுகின்றார்கள். நானும் அதில் நடிக்கின்றேன். அதற்காக ஒத்திகை பார்க்கணும். அதுதான் போதுமா?'

'வாசு, பணக்கார வீட்டுப் பிள்ளைகளென்றால் பெற்றோர் எதுவும் கேட்கமாட்டார்கள். நான் ஏழை. நீ எனக்கு ஒரே ஒரு மகன் என்னவோ ஏதோவென்று பெற்ற மனம் சங்கடப்படுகின்றது அதனால்தான்டா கேட்டேன். வித்தியாசமாக இல்லையடா?'

''அம்மா! நான் சிறு பிள்ளையல்ல. எமது நிலை தெரியாமல் விளையாடுவேனா? எனக்குச் சகல வசதிகளும் தந்து நீயே நடிக்க வேண்டும் என்று பதிவாளர் வந்து கேட்ட பொழுது மறுக்க முடியவில்லை. உங்களிடம் கூறினால் பேசுவீர்களோ என்று பயந்துதான் எதுவும் கூறவில்லை. என்னை மன்னித்து விடுங்களம்மா.'' என்று கூறிய பொழுது அவன் விழிகளில் நீர் மல்கி நின்றது.

''என் பிள்ளையின் குணம் எனக்குத் தெரியாதா? நீ ஏன்டா கலங்குகின்றாய்? முகத்தைக் கழுவிக்கொண்டு வாடா தேனீர் போடுகிறன்.'' என்று கூறிவிட்டு அடுப்பங்கரைக்குச் சென்றாள் பாக்கியலட்சுமி.

அவள் உள்ளத்தில் மகனைப் பற்றிய நினைவுகளே மிதந்து வந்தன. அவனை ஒத்த பிள்ளைகள் பெற்றோருக்கு அடங்காமல் நடப்பதும், அது இது என்று வீட்டினரை ஏமாற்றிவிட்டு அலைவதும் அவள் தன் கறிந்த ஒன்று. தன் பிள்ளை அப்படி இல்லை என்ற நம்பிக்கை அவள் உள்ளத்தில் இருந்தாலும் உலகம் போகின்ற போக்கில் தன் பிள்ளையும் எப்படி மாறிவிடுவானோ என்ற பயம் அவளை இடைக்கிடையே வாட்டியது அதனால் தான் அப்படி ஒரு நிகழ்ச்சி அங்கே நடைபெற்றுவிட்டது. அவள் சிந்தனையைக் கலைக்கவென்று வந்தவன்போல்,'' அம்மா தேனீர் போட்டாச்சா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் வாசுதேவன்.

''போட்டாச்சப்பா அது சரிவாக என்ன நாடகம் போடுறியள்?'' என்று தேனீர்க் கோப்பையை அவனிடம் நீட்டிக் கொண்டே கேட்டாள் பாக்கியலட்சுமி.

''அது சரித்திர நாடகம் அம்மா. நரசிம்மவர்மன் என்ற ஓர் மன்னனின் வரலாற்றில் ஒருபகுதி''

''எனக்கென்னடா தெரியும் வாசு? சும்மாதான்கேட்டேன்.'' என்று கூறிவிட்டுத் தனது அலுவல்களில் ஈடுபட்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை ஆறரை மணியளவில் வீணையின் ஒலி மாடிபூராவும் இன்பகீதம் இசைத்துக் கொண்டிருந்தது. தன்னை மறந்த நிலையில் விரல்களைத் தந்தியில் ஓடவிட்டு புதிய புதிய, கற்பனைகள் அனாயசமாக மீட்டிக்கொண்டிருந்தாள் ராதாலட்சுமி. பூசை அறையிலிருந்த சோமசுந்தரம் தன்னைமறந்தவராய் கண்மூடிக் கொண்டிருந்தார். வீணையின் ஒலி நின்றுவிட்டதாயினும் அவளிசைத்த 'சகானா' ராகம் அவர் செவிகளிலே ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. பூசை அறையை விட்டு வெளியே வந்தவர் நடுக்கூடத்தில் வீணையும் கையுமாகசரஸ்வதிதேவிபோன்றுவீற்றிருக்கும் மகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதுவரை ஏதோ கற்பனையில் திளைத்திருந்த ராதாலட்சுமி தந்தையைப் பார்த்துவிட்டு,'' என்னப்பா எதுவுமே பேசாமலிருக்கின்றீர்கள்.'' என்றாள்.

''இந்தவீட்டில் நீ வீணையை மீட்டும் பொழுது தான் எனக்கு ஆனந்தம் ஏற்படுகின்றது. இன்று அதிகாலையிலேயே இப்படி ஓர் இனிய இசை இன்பத்தை அனுபவிக்க முடியும் என்று நான் நினைக்கவேயில்லை.'' என்றார்.

''அதுவா? வந்தப்பா இன்று......'' என்று அவள் முடிக்குமுன்பு அவள் பெயரைக் கூறிப்பனர் கூப்பிடும் சப்தம் கேட்டது. தகப்பனும் மகளுமாக வெளியே ஓடினர்.

— வளரும்

---

## நெடுங்கேணியில் அண்ணா விழா

'உலகத் தமிழர்களின் தலைவன் அறிஞர் அண்ணா அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. ஆனால் அண்ணாவின் நினைவு, அவரின் உருவம் உலகில வாழும் தமிழ் மக்கள் உள்ளத்தில் அழியாத இடம் பெற்றுவிட்டது. தமிழ் மக்களாகிய நாம் அவரின் வழியில்—அவரின் கொள்கைகளைப் பின்பற்றி நடப்போம். அப்போதுதான் அவரின் ஆத்மா சாந்தியடையும்.

—இவ்வாறு நெடுங்கேணி நாவலர் நாடக மன்றத்தினரால் நடத்தப்பட்ட அண்ணா நினைவு விழாவில் உரையாற்றிய திரு. த. ம. பீற்றர் பொன்கலன் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது.




2—வது மகத்தான மாதம்

"தேவனே என்னைப் பாருங்கள்"

சென்ட்ரல் ராணி
(மருதானை) (யாழ் நகர்)

சிவாஜிகணேசன், சாரதா,
விஜயநிர்மலா, மனோரமா, சுந்தரராஜன்
வீ. கே. ராமசாமி, நடிக்கும்

# ஞான ஒளி

டைரக்ஷன்: — பி. மாதவன் பீ. ஏ.

சென்னையில் 100 நாட்களுக்குமேல் ஓடிய மகத்தான திரையோவியம்

---

மல்லியம் ராஜகோபாலின்
கருத்துமிக்க வசனங்கள்

ஜெமினிகணேசன், பத்மினி,
நாகேஷ், சுந்தரராஜன்,

சௌகார் ஜானகி



பேபிராணி
மனோரமா

வீ. கே. ராமசாமி

நடித்த

4வது வாரம்

# செல்லமகால்

---

காட்சியளிக்கிறாள்! அத்தைமகள்
தேனினும் இனிய

கெப்பிட்டி (கொட்டாஞ்சேனை) விலாசினி (தெகிவளை)
நெல்சன் (திருமலை)



ஓர் கொலை
அடுத்து
நிலை தடுமாறுகிறாள்

அத்தைமகள்

அத்தை மகன் எங்கே?
சந்தியுங்கள் விடைகேட்க
ஜெய்சங்கர், ஆனந்தன், வாணிஸ்ரீ,

---



தமிழ் நாட்டில் வெள்ளி விழா கொண்டாடிய
மாபெரும் காவியம்! 3வது மாதம்!

கெப்பிட்டல் (கொழும்பு) வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ,

—நடித்த—

# வசந்தமாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

---

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) லிடோ (யாழ்ப்பாணம்)

ஜெமினி, பத்மினி, சிவகுமார், மனோகர், சுந்தரராஜன், சோ, நடித்த

தேரோட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194வ இலக்கத்தில் 1973ம் வருடம் ஏப்ரல் மாதம் 1 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.